Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு 25-5-2005 Issued 25-5-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளி, நவம்பர் 19, 2004—தொகுதி 66—எண் 1

Friday the 19th November, 2004—Volume 66—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V211, 31 P05.
P05.66.1,
226624.

318/2005

19-11-2004

## உள்ளடக்கம்


பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் — v-ix

Governor and Council of Ministers — xi-xiv

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் — xv-xvii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகரவரிசைப்படி) — xvx-xxix

**1. அறிவிப்புகள்—**

(அ) தேசிய ஒருமைப்பாடு தின உறுதிமொழி—பேரவை சிறிது நேரம் ஒத்திவைக்கப் பெறுதல் — 1,28

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2004-2005, மொழிதல் (ஆசெ.) — 122

**2. வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் — 1-28

**3. தகவல் கோரல்—**

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பு — 28-29,32

(ஆ) திருப்பூர் சாயப்பட்டறை கழிவுநீர், நொய்யல் ஒரத்துப்பாளையத்தில் கலப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு — 32

பக்கங்கள்

**4. சிறப்புக் கவன ஈர்ப்பு—**

(அ) காவிரி டெல்டா பகுதிகளில் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம் மற்றும் மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுதல் .. 31-88

*திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் .. 33-39,88

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா .. 34,39,48,49, 55,63,83,84, 86-87,88

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் .. 35,36,38,54

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன் .. 37-38

திரு. கோ.சி. மணி .. 40-43

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் .. 41-42,64-82, 85-86,88

திரு. ஜி.கே. மணி .. 43-45

திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. 46-48

திரு. வை. சிவபுண்ணியம் .. 49,52,53, 54-58

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் .. 50-52,53

திரு. வி.கே. லட்சுமணன் .. 58

திரு. ஜெக. வீரபாண்டியன் .. 58-61

திரு. லா. சந்தானம் .. 61-64

திரு. ஜி. பழனிசாமி .. 87

(ஆ) பெட்ரோலியப் பொருட்களின் மீது விற்பனை வரியினைக் குறைக்க வேண்டுமென்ற கோரிக்கை .. 84,89-108

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் .. 89-90,91,92 94,95,106





பக்கங்கள்

**4. சிறப்புக் கவன ஈர்ப்பு**—தொடர்ச்சி

(ஆ) பெட்ரோலியப் பொருட்களின் மீது விற்பனை வரியினைக் குறைக்க வேண்டுமென்ற கோரிக்கை—தொடர்ச்சி

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா .. 90-92,93, 94-95,104

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் .. 95,96-108

திரு. துரை முருகன் .. 104,105

(இ) குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு குடும்ப அட்டை வழங்கப்பட நடவடிக்கை .. 108-115

திரு. சி. ஞானசேகரன் .. 108-110

திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. 110-111

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் .. 111-115

**5. கவன ஈர்ப்பு—**

சென்னை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க தெலுங்கு—கங்கா திட்டம் மூலம் நிரந்தரமாகத் தண்ணீர் பெறுதல். .. 115-120

**6. அறிக்கைகள் அளித்தல்—**

(அ) அரசு உறுதிமொழிக் குழு .. 120

(ஆ) மனுக்கள் குழு .. 120

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு .. 120

**7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 .. 121

**8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2004–2005, விவாதமும், வாக்கெடுப்பும்—** .. 122-129

**9. அரசினர் தீர்மானம்—**

விதி 32-ஐத் தள்ளத்தல் .. 129-130

**10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** .. 130

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர் .. மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

*பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.*

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

*பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.*

**3. நிதி அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

*நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.*

226624

**4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல்.

**5. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு, புள்ளியியல் மற்றும் கூட்டுறவு.

**6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

**7. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

**8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

**9. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.



**10. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

**11. போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

**12. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

**13. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

**14. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

**15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**

கால்நடை பராமரிப்பு.

**16. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

*வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.*

**18. கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

*கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டோர் மற்றும் வணிக வரிகள்.*

**19. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

*பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.*

**20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

*கைத்தறி மற்றும் துணித் தொழில்.*

**21. மீன்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

*மீன்வளம்.*

**22. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*



**23. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

*தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.*

**24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

*செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.*

**25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

*விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.*

\- - -

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:**<br>Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:**<br>Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law and Information Technology** | .. | **The Hon. Thiru D. Jayakumar:**<br>Law, Courts and Information Technology. |
| 5. **Minister for Food and Co-operation** | .. | **The Hon. Thiru Pollachi V. Jayaraman:**<br>Food, Civil Supplies, Consumer Protection, Price Control, Statistics and Co-operation. |

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. P. Vijayalakshmi Palanisamy:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Health, Medical Education and Family Welfare.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi & Village Industries Board.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport and Electricity** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Electricity and Non-conventional Energy Development.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Agriculture** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

14. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

15. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

Animal Husbandry.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

17. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

18. **Minister for Education and Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees, Evacuees and Commercial Taxes.

19. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

| | | |
|---|---|---|
| 20. **Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundaram:**<br>Handlooms and Textiles. |
| 21. **Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:**<br>Fisheries. |
| 22. **Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:**<br>Tourism and Tourism Development Corporation. |
| 23. **Minister for Labour** | .. | **The Hon. Thiru P. Annavi:**<br>Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| 24. **Minister for Information & Publicity and Local Administration** | .. | **The Hon. Thiru K.P. Anbalagan:**<br>Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural indebtedness, Urban and Rural Water Supply. |
| 25. **Minister for Sports and Youth Welfare** | .. | **The Hon. Thiru Inbathtamilan:**<br>Sports and Youth Welfare. |



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள் #

*திரு. ப. இராஜரெத்தினம்*
*திரு. அ. அன்வர் ராஜா*
*திருமதி சி.எம். சூரியகலா*
*திரு. லா. சந்தானம்*
*டாக்டர் தே. குமாரதாஸ்*
*முனைவர் செ.கு. தமிழரசன்*

### செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

---

# 17-11-2005 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே.எஸ். சந்திரசேகரன், பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ | - சார்புச் செயலாளர் |
| திரு. அ. நவாப்ஜான், பி.ஏ., பி.ஜி.எல் | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. ப. சுப்ரமணியன், எம்.ஏ | - தலைமை நிருபர் |

# பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. புவனகிரி |
| 10 | அழகம்மாள், திருமதி வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகு.சி. | .. பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |

| | | |
|---|---|---|
| 20. | ஆறுமுகம், திரு. கே. | - செங்கல்பட்டு |
| 21. | ஆறுமுகம், திரு. த. | - திருவொற்றியூர் |
| 22. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - அண்ணா நகர் |
| 23. | ஆஸ்டின், திரு. | - நாகர்கோவில் |
| 24. | இரவிராஜ், திரு. கோ. | - திருத்தணி |
| 25. | இராசேந்திரன், திரு. சி. | - திருவோணம் |
| 26. | இராசேந்திரன், திரு. சோ. | - கோவில்பட்டி |
| 27. | இராமசாமி, திரு. கே.ஆர். | - திருவாடனை |
| 28. | இராமச்சந்திரன், திரு. எஸ். | - கலசப்பாக்கம் |
| 29. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | - கம்பம் |
| 30. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | - சாத்தூர் |
| 31. | இராமு, திரு. ந. | - உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 32. | இராம் பிரபு, திரு. இரா. | - பரமக்குடி (செ.வ.) |
| 33. | இராஜசேகர், திரு. மா. | - ராஜபாளையம் (செ.வ.) |
| 34. | இராஜரெத்தினம், திரு. ப. | - பெரம்பலூர் (செ.வ.) |
| 35. | இராஜா, திரு. டி.கே. | - திருப்பத்தூர் |
| 36. | இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. | - பத்மநாபபுரம் |
| 37. | இராஜேந்திரன், திரு. பி.ஜி. | - ஆலங்குளம் |
| 38. | இலட்சுமணன், திரு. கே.என். | - மயிலாப்பூர் |
| 39. | இளவழகன், திரு. ப. | - அரியலூர் |
| 40. | இளையகண்ணு, திரு. கா.தி. | - ஏற்காடு (ஆ.வா.) |
| 41. | இன்பத்தமிழன், திரு. | - ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 42. | ஈஸ்வரன், திரு. ரா. | - வாசுதேவநல்லூர் (செ.வ) |



| | | |
|---|---|---|
| 43. | உசேன், திரு. எஸ்.ஏ.எம். | - திருவல்லிக்கேணி |
| 44. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | - தஞ்சாவூர் |
| 45. | உமாதேவன், திரு. கே.கே. | - திருப்பத்தூர் |
| 46. | உலகரட்சகன், திரு. பி.எஸ். | - செய்யாறு |
| 47. | ஏழுமலை, திரு. வெ. | - செஞ்சி |
| 48. | கணபதி, திரு. ந. | - வானூர் (செ.வ.) |
| 49. | கணேசன், திரு. ஆர்.டி. | - தேனி |
| 50. | கணேசன், திரு. ஐ. | - எடப்பாடி |
| 51. | கணேசன், திரு. வி. | - மங்களூர் (செ.வ.) |
| 52. | கண்ணன், திரு. ஏ.எஸ். | - பொன்னேரி (செ.வ.) |
| 53. | கந்தசாமி, திரு. க.ரா. | - சத்தியமங்கலம் |
| 54. | கந்தசாமி, திரு. கா. | - குன்னூர் (செ.வ.) |
| 55. | கருணாகரன், திரு. கே.சி. | - சிங்காநல்லூர் |
| 56. | கருணாநிதி, திரு. மு. | - சேப்பாக்கம் |
| 57. | கருப்பசாமி, திரு. சொ. | - சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 58. | கருப்பணன், திரு. கே.சி. | - பவானி |
| 59. | கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. | - குளத்தூர் (செ.வ.) |
| 60. | கலாவதி, திருமதி கு. | - சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 61. | கனகதாரா, செல்வி சி. | - பேரணாம்பட்டு (செ.வ.) |
| 62. | கனிதா சம்பத், திருமதி எஸ். | - திருப்போரூர் (செ.வ.) |
| 63. | காசாம்பு பூமாலை, திருமதி | - சங்கராபுரம் |
| 64. | காமராஜ், திரு. மே.ப. | - தாரமங்கலம் |
| 65. | கார்த்தி, திரு. மு. | - சேலம்-2 |

66. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
72. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
89. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆவா.)



90. சாமி, திரு. ஆர். - மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
102. சுதர்னம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
111. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
112. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
113. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்

| | | | |
|---|---|---|---|
| 114. | சேகரன், திரு. கே.என். | - | திருவெறும்பூர் |
| 115. | சேகர்பாபு, திரு. பி.கே. | - | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 116. | சோமசுந்தரம், திரு. வி. | - | உத்திரமேரூர் |
| 117. | ஞானசேகரன், திரு. சி. | - | வேலூர் |
| 118. | ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. | - | திருநாவலூர் |
| 119. | தமிழரசன், முனைவர் செ.கு. | - | நன்னிலம் (செ.வ.) |
| 120. | தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி | - | மேல்மலையனூர் |
| 121. | தம்பிதுரை, டாக்டர் மு. | - | பர்கூர் |
| 122. | தவமணி, திரு. க. | - | திருவிடைமருதூர் |
| 123. | தளவாய் சுந்தரம், திரு. ந. | - | கன்னியாகுமரி |
| 124. | தனபால், திரு. ப. | - | சங்கரி (செ.வ.) |
| 125. | தாமோதரன், திரு. எஸ். | - | விருதுநகர் |
| 126. | தாமோதரன், திரு. செ. | - | கிணத்துக்கடவு |
| 127. | தாமோதிரன், திரு. ப.வெ. | - | பொங்கலூர் |
| 128. | திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | - | பேராவூரணி |
| 129. | திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். | - | காஞ்சிபுரம் |
| 130. | துரைமுருகன், திரு. | - | காட்பாடி |
| 131. | துரைராஜ், திரு. சி. | - | சேடப்பட்டி |
| 132. | தென்னரசு, திரு. கே.எஸ். | - | ஈரோடு |
| 133. | நடராசன், திரு. வ.து. | - | இளையான்குடி |
| 134. | நடராஜன், திரு. அ. | - | குத்தாலம் |
| 135. | நடராஜன், திரு. எஸ். | - | நாட்ராம்பள்ளி |
| 136. | நடராஜன், திரு. பி.கே.டி. | - | ஆத்தூர் |



| | | | |
|---|---|---|---|
| 137. | நயினார் நாகேந்திரன், திரு. | - | திருநெல்வேலி |
| 138. | நரசிம்மன், திரு. பி.எம். | - | பள்ளிப்பட்டு |
| 139. | நளினி மனோகரன், திருமதி | - | போளூர் |
| 140. | நன்மாறன், திரு. என். | - | மதுரை கிழக்கு |
| 141. | நீலகண்டன், திரு. ப. | - | ஆற்காடு |
| 142. | நீலமேகவர்ணம், திரு. லெ. | - | சாத்தான்குளம் |
| 143 | நெப்போலியன், திரு. து. | - | வில்லிவாக்கம் |
| 144. | பச்சைமால், திரு. கே.டி. | - | குளச்சல் |
| 145. | பதினெட்டாம்படியான், திரு. க. | - | முதுகுளத்தூர் |
| 146. | பரணிகுமார், திரு. பா. | - | திருச்சிராப்பள்ளி-1 |
| 147. | பரிதி இளம்வழுதி, திரு. | - | எழும்பூர் (செ.வ.) |
| 148. | பவானி கருணாகரன், திருமதி கே. | - | அரக்கோணம் (செ.வ.) |
| 149. | பழனிசாமி, திரு. கே.எஸ். | - | பெருந்துறை |
| 150. | பழனிசாமி, திரு. ஜி. | - | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 151. | பழனியப்பன், திரு. பெ. | - | மொரப்பூர் |
| 152. | பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | - | குறிஞ்சிப்பாடி |
| 153. | பன்னீர்செல்வம், திரு. ஓ. | - | பெரியகுளம் |
| 154. | பாண்டுரங்கன், திரு. கே. | - | அணைக்கட்டு |
| 155. | பாப்பாசுந்தரம், திரு. அ. | - | குளித்தலை |
| 156. | பாரமலை, திரு. க. | - | மானாமதுரை (செ.வ.) |
| 157. | பாரிமோகன், திரு. கி. | - | தருமபுரி |
| 158. | பாலகிருஷ்ணன், திரு. சோ. | - | கடலாடி |

159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
168. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்
169. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. பொள்ளாச்சி
170. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
171. பொன்னம்பலம், திரு. டி.பி. .. சமயநல்லூர் (செ.வ.)
172. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
173. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
174. மகாலிங்கம், திரு. எஸ். .. அவிநாசி (செ.வ.)
175. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
176. மஹேஸ்வரி, திருமதி எ.எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
177. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
178. மணி, திரு. டி. .. விளவங்கோடு
179. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
180. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
181. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி



182. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி
183. மில்லர், திரு. அ. .. கடலூர்
184. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
185. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
186. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்
187. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
188. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
189. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
190. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
191. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
192. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
193. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
194. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
195. ராதாரவி, திரு. .. சைதாப்பேட்டை
196. ராமசாமி, திரு பி.சி. .. மொடக்குறிச்சி
197. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
198. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
199. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
200. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
201. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
202. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
203. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
204. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்
205. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்

| | | |
|---|---|---|
| 206. வட்சுமணன், திரு. வி.கே. | - | கோயம்புத்தூர் கிழக்கு |
| 207. வியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | - | அரவக்குறிச்சி |
| 208. வடிவேல், திரு. ஆர். | - | வாணியம்பாடி |
| 209. வளர்மதி, திருமதி பா. | - | ஆலந்தூர் |
| 210. வளர்மதி ஜெபராஜ், திருமதி | - | மதுரை மேற்கு |
| 211. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | - | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 212. வாசுதேவன், திரு. பெ. | - | மதுராந்தகம் |
| 213. விசுவநாதன், திரு. இரா. | - | நத்தம் |
| 214. வில்வநாதன், திரு. இரா. | - | சோளிங்கர் |
| 215. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | - | பூங்கா நகர் |
| 216. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | - | புதுக்கோட்டை |
| 217. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | - | பனமரத்துப்பட்டி |
| 218. வீரபாண்டியன், திரு. ஜெக. | - | மயிலாடுதுறை |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | - | ஆலங்குடி |
| 220. வெங்கடாஜலம், திரு. செ. | - | சேலம்-I |
| 221. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - | வேதாரண்யம் |
| 222. வேலு, திரு. எ.வ. | - | தண்டராம்பட்டு |
| 223. வேலுசாமி, திரு. செ.ம. | - | பல்லடம் |
| 224. வேல் முருகன், திரு. தி. | - | பண்ருட்டி |
| 225. வைதியலிங்கம், திரு. மீ.அ. | - | தாம்பரம் |
| 226. வைத்திலிங்கம், திரு. ஆர். | - | ஒரத்தநாடு |
| 227. ஜீவானந்தம், திரு. இரா. | - | நாகப்பட்டினம் |
| 228. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | - | ஆரணி |



| | | |
|---|---|---|
| 229. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 230. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 231. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 233. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | - | (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## கார்த்திகை 4, தாரண - திருவள்ளுவர் ஆண்டு 2035

## 2004 நவம்பர் 19, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்*

*நீள்வினையால் நீளும் குடி."*

*ஆழ்ந்த அறிவும், விடாமுயற்சியும் கொண்டு ஒருவர் அயராது பாடுபட்டால் அவரைச் சேர்ந்துள்ள குடிமக்களின் பெருமை உயரும்.*

## 1. அறிவிப்பு

### (அ) தேசிய ஒருமைப்பாடு தின உறுதிமொழி—பேரவை சிறிது நேரம் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தேசிய ஒருமைப்பாடு தினத்தையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலை 11-00 மணிக்கு தலைமைச் செயலகப் பிரதான கட்டடத்திற்கு அருகில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் உறுதிமொழி செய்து வைக்க உள்ளார்கள். அந்நிகழ்ச்சியில் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் பேரவை காலை 10-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்று மீண்டும் 11-15 மணிக்குக் கூடும்.

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 41, திரு. எஸ். மாணிக்கராஜ், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்

41—

## சாலை விரிவாக்கம்

***24500—திரு. எஸ். மாணிக்கராஜ்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாகர்கோவில்-திருச்செந்தூர் சாலையை விரிவுபடுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை விரிவுபடுத்தும் திட்டம் தற்சமயம் இல்லை.

**திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதியில், நாகர்கோவில் முதல் திருச்செந்தூர் வரை உள்ள சாலையை விரிவுபடுத்தினால், திருச்செந்தூரில் உள்ள சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் அது மிகவும் பயனுள்ளதாக அமையும். மேலும் இது ஒரு சுற்றுலாத் தலமாக இருப்பதால் சுற்றுலாப் பயணிகளுக்கும் போக்குவரத்திற்கு வசதியாக இருக்கும். எனவே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இதனை மறுபரிசீலனை செய்து இந்தச் சாலை விரிவுபடுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் வினாவில் குறிப்பிட்ட சாலையானது நாகர்கோவில்-திருச்செந்தூர் சாலை ஆகும். இதன் மொத்த நீளம் 64.8 கி.மீ. ஆகும். இதில் 34.5 கி.மீ. நீளமுள்ள சாலை தூத்துக்குடி கோட்டத்திலும், 30.3 கி.மீ. சாலை திருநெல்வேலி கோட்டத்திலும் பராமரிக்கப்படுகிறது. நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சாலையின் பெயர் ஆழ்வார்திருநகரி-சாத்தான்குளம்-இட்டாமொழி—



வள்ளியூர் சாலை ஆகும். இது கி.மீ. 29/9 முதல் 38/4 வரையுள்ளது. இந்த 8.5 கி.மீ. நீளம் உள்ள மாநிலச் சாலை தற்போது நல்ல நிலையில் உள்ளது. உறுப்பினர் கோரிய ஒருவழிச் சாலையான 8.5 கி.மீ. நீளத்தை, இருவழித் தடச் சாலையாக அகலப்படுத்தி பாலம் கட்ட ரூ.260 இலட்சம் தேவைப்படும். மேலும் நாகர்கோவில்-திருச்செந்தூர் சாலையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் வருகின்ற சாலையும், எதிர்வரும் காலத்தில் அரசின் நிதிநிலைமைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் இருவழித்தடச் சாலையாக மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதி ஆண்டிலாவது இப்பணி நிறைவேற்றித் தரப்படுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் பணி முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் சாலை என்று சொல்கிறபோது, ஆரல்வாய்மொழி சாலையைக் குறிப்பிடுகின்றார்களா அல்லது நாகர்கோவில் முடிய உள்ள சாலையைக் குறிப்பிடுகின்றார்களா? ஏனென்றால் இதுசம்பந்தமான விவரங்கள் வருகின்றபோது, அந்த மாவட்டத்தினுடைய கடைசிப் பகுதியான களியக்காவிளை வரை என்று மாற்றிக்கொண்டால் - அது மொத்தத்தில் வருகின்ற அந்தச் சாலையினுடைய விரிவாக்கமாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த வளர்ச்சிப் பணிகளாக இருந்தாலும் சரி-வசதியாக இருக்குமென்ற அந்த அடிப்படையிலே அந்த மாவட்டத்தினுடைய கடைசிப் பகுதியான களியக்காவிளை வரை இதை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய களியக்காவிளை வரை இந்தச் சாலையை நீட்டித் தருவதற்கு எதிர்வரும் காலங்களில் முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 42, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.*

**42—**

## வீடியோ கான்பரன்சிங் வசதி

***28762—திரு. வெ. ஏழுமலை:**

*மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தலைமைச் செயலகத்திலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் வீடியோ கான்பரன்சிங் மூலம் பேச ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தலைமைச் செயலகத்திலிருந்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஒருங்கிணைந்த சேவைகள் இலக்க முறை வலையமைப்பு (ISDN) தொலைபேசி இணைப்பு வழியாக வீடியோ கான்பரன்சிங் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்நிய முதலீடு மட்டுமின்றி நாட்டின் பாதுகாப்பு, நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி ஆகிய அத்தனை துறைகளிலும் மேன்மை பெற்று இருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில், தகவல் மற்றும் தொழில்நுட்பவியல் துறையின் அடித்தளம் மிகவும் பலம் வாய்ந்த நிலையில் அமைக்கப்பட்டுள்ளது கண்டு மகிழ்ச்சி அடையும் இந்த வேளையில், TIDEL Park, TICEL Park போன்ற தொழில்நுட்பப் பூங்காக்களை அமைத்து மகிழ்கின்ற இந்த ஆட்சியில், சென்னையில் உள்ளதைப் போல தகவல் மற்றும் தொழில்நுட்பவியல் முன்னறிவுக்கூறுகள் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களுக்கு விரிவுபடுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோன்று Video Conferencing வசதி செய்யப்பட்டிருப்பதற்கு இந்த



வேளையிலே அம்மா அவர்களுக்கு நன்றி கூறுவதோடு, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குச் சென்று அங்கிருந்து தலைமைச் செயலக அதிகாரிகளுடன் பேசுவதற்கு Video Conferencing வசதி செய்து தரப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூலம் Video Conferencing 20-3-2003 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, அதன் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சில காவல் துறை கண்காணிப்பாளர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோருடன் அன்றைக்கு நேரடியாக உரையாடியதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாகப் பார்த்திருப்பார்கள். எனவே 20-3-2003 அன்று தொடங்கி வைக்கப்பட்ட இந்தத் துவக்கம் இன்றைக்குப் பெருமளவிலே எல்லா நிலைகளிலும் Video Conferencing மூலம் தொடர்பு கொள்வதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யப்பட வேண்டும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவினை ஏற்று, அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்ல, Video Conferencing என்ன ஒரு impact-ஐ சமுதாயத்திலே ஏற்படுத்தும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே கிட்டத்தட்ட 17 ஆயிரம் கிராமங்கள் இருக்கின்றன. இந்த 17 ஆயிரம் கிராமங்களில் இருக்கின்றவர்கள், அந்தந்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்கு வேண்டிய பட்டா, சிட்டா, அடங்கல், பிறப்புச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ் மற்றும் பல்வேறு சான்றிதழ்கள் பெற வேண்டும் என்றாலும்கூட, மாவட்ட ஆட்சித் தலைவருடைய அலுவலகத்திற்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தியாவிலேயே முதன் முதலாகத் துவக்கிய இந்தத் திட்டம், வருங்காலத்திலே தமிழ்நாடு ஒரு முதன்மை மாநிலம் என்கின்ற ஒரு சூழ்நிலையில், இருக்கின்ற இடத்திலே இருந்துகொண்டு அனைத்துத் தகவல்களையும் ஒரு குடிமகனால் பெறுகின்ற சூழ்நிலை நிச்சயமாக வருங்காலத்திலே ஏற்பட உள்ளது. எனவே இந்தத் துவக்கம் நல்ல ஓர் ஆர்வமாக இருந்து, நல்லபடியாக இன்றைக்கு விரிவடைந்து கொண்டிருக்கிறது.

இன்னொரு ஆச்சரியப்படத்தக்க விஷயம், இந்த மூன்றரை ஆண்டு காலத்தில் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் 44 ஆயிரம் கிலோ மீட்டருக்கு Optic Fibre Cable போடுவதற்கு உத்தரவிட்டு, ஒரு நல்ல Band-width—அதாவது Band-width என்று சொல்லும்போது, கிட்டத்தட்ட இந்தியாவில் இருக்கின்ற நூறு கோடியே பதினேழு இலட்சம் மக்கள் ஒரே நேரத்திலே பேசினாலும்கூட engaged என்கிற அந்தப் பிரச்சினை வராது. அந்த அளவிற்கு ஒரு Band-width— இன்றைக்கு தமிழ்நாட்டிலே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத்திலே நல்ல நிலையில் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. 167(ii) (b) அந்த Cr.P.C.-ஐத் திருத்தி, Remand prisoners-அதாவது சிறைவாசிகள்கூட இப்போது அங்கே இருந்துகொண்டு அவர்கள் தங்களுடைய வாக்குமூலத்தைப் பதிவு செய்யக்கூடிய வகையிலே அதற்கெல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கேள்வியைக் கேட்டார்கள். அதேபோன்று Tier II cities; அதாவது சென்னையைப் போன்று மற்ற மாநகரங்களிலே தகவல் தொழில்நுட்பத்தை முன்னேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று கேட்டார்கள். நிச்சயமாக அது அரசினுடைய தீவிர பரிசீலனையில் இருக்கின்றது. மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி போன்ற மாநகரங்களை Tier II cities-ஆக உருவாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. ஏழுமலை:** தலைவர் அவர்களே, Video Conferencing முறையை வட்டாட்சியர் அலுவலகம் வரை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே என்னுடைய பதிலில் சொன்னதுபோல ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு குக்கிராமம் வரை கிராம மக்கள், பிறப்பு, இறப்புச் சான்றிதழ், சிட்டா, அடங்கல், பட்டா என்று அனைத்துச் சான்றிதழ்களையும்கூட இருக்கும் இடத்திலேயே இருந்து கொண்டு பெறுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. கிட்டத்தட்ட 17 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்புகூட உருவாக்குவதற்கு வேண்டிய ஒரு வழிவகை ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு, முதற்கட்டமாக 10



மாவட்டங்களிலே RASI - Rural Access Services through Internet என்ற இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கின்றது. இது எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட இருக்கிறது. அதிலே Rural Access Services through Internet என்று சொல்லும்போது, கிட்டத்தட்ட 1,500 கிராமங்களிலே இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அதிலே கிட்டத்தட்ட 903 n-Logue மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 600 VIDEO CONFERENCING என்ற இந்தத் திட்டம் self help group மூலமாக - சுயஉதவிக் குழுக்கள் மூலமாக — செயல்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில், இருந்த இடத்திலே இருந்துகொண்டு அவர்கள் மாதந்தோறும் கிட்டத்தட்ட ரூ. 3,000, 4,000 சம்பாதிக்கின்ற நிலை தற்போது உருவாகியிருக்கிறது. எனவே இது நல்ல திட்டம் என்பதால் அனைத்து மாவட்டங்களிலுமே இத்திட்டத்தை விரிவுபடுத்த இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த Video Conferencing திட்டத்தை தலைமைச் செயலகத்திலிருந்து முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்திருக்கிறார் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது நாகப்பட்டினம் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இத்திட்டம் மூலம் விசாரிக்கப்பட்டதா? அதுமட்டுமல்லாமல் cell phone-களில் conferencing வசதி தற்போது வந்திருக்கிறது. பல அரசு அதிகாரிகளைச் சென்று பார்க்கின்ற நேரத்திலே அவர்கள் Meeting-க்குச் சென்றிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இதனால் பணம் இன்றைக்கு அவர்களுக்காக வீணடிக்கப்படுகிறது. ஆகவே CELL PHONE CONFERENCING வசதிகளைக் கொண்டு அவர்கள் எல்லாம் முடிவுகளை எடுக்கக்கூடிய அளவிற்குச் செய்து, அடிக்கடி, எடுத்ததற்கெல்லாம் Meeting என்று போகின்ற நிலையை மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல அரசுப் பணம் வீணடிக்கப்படுவதில்லை, விரயம் ஆக்கப்படுவதில்லை. இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கிவைத்த இந்தத் திட்டம் உண்மையிலேயே ஒரு நல்ல திட்டம். இப்போது

தலைமைச் செயலகத்திலே Chief Secretary-யிடம் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர்களிடத்திலே இருக்கின்றது. உடனடியாக அவர்கள் எந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடனும், யாருடன் வேண்டுமானாலும் தொடர்புகொண்டு, என்ன நிலைமை என்பதை நேருக்கு நேராக, face to face, one to one பேசக்கூடிய அளவுக்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அவ்வாறு பேசிக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கூட, எதாவது ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நீங்கள் போய் இருங்கள். நாங்கள் எல்லாம் உங்களோடு பேசுவதற்குக்கூட தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 17 ஆயிரம் கிராமங்களில் இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவரோடு அந்த Video Conferencing-ல் பேசக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்தார்கள். அந்தக் கிராம மக்கள் எப்படி மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்புகொள்ள முடியும்? அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சாதனங்கள் என்ன என்பதை அமைச்சர் தெரிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன். அடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பொழுது Video Conferencing மூலமாக remand extension-ஜெயிலில் இருந்தபடியே செய்ய முடியும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கணினி வழங்கியிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களின் இல்லங்களில் தொலைபேசியும் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள், முதலமைச்சர் அவர்களையும் மற்றும் அனைத்து அமைச்சர்களையும் தொடர்பு கொண்டு தங்கள் தொகுதியிலே ஏற்படுகின்ற பிரச்சினைகளைக் குறித்து Video Conferencing-ல் பேசுவதற்கு வசதியாக, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுடைய அலுவலகங்களுக்கும் Video Conferencing வசதி செய்வதற்கு தமிழக அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கணினி வாங்குவதற்கு உத்தரவிட்டு எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் கணினி வாங்கி பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன். நம்முடைய ஞானசேகரன்கூட ஒரு interpretation-ஐ என்னுடைய அறையிலே வந்து சொன்னார்கள். எனக்கு கணினி தேவையில்லை, Laptop வேண்டுமென்று சொன்னார்கள். உடனே Laptop அவருக்கு வாங்கிக்கொடுக்கப்பட்டது. Laptop-ஐ கணினியோடு ஒப்பிடும்போது இந்தக் கணினியினுடைய பயன்பாடு இதிலும் இருக்கிற காரணத்தால், மடி அமர்வாக இருக்கிற Laptop அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே பெரிய வித்தியாசமே கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல் முருகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். உங்களுக்குக் கொடுக்கப்பட்ட கணினியிலே ஒரு Web camera வா... பொருத்திக்கொள்ளுங்கள். ISDN line அதாவது, ஒருங்கிணைந்த சேவைகள் இலக்கு முறை வலை அமைப்பு என்கிற இந்த இணைப்பை BSNL மூலமாகப் பெற்றால் நீங்கள் யாருடன் வேண்டுமானாலும், அமெரிக்காவிலே இருப்பவர்களோடுகூட பேசிக்கொள்ளலாம். அதிலே எந்தத் தடையும் இல்லை. எனவே நீங்கள் அதை வாங்கிக்கொள்ளலாம் என்ற அந்தக் கருத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று. வருங்காலத்தில், அதாவது technology என்று சொல்லும்போது, தினமும் அதிலே advancement இருக்கிறது. இன்றைக்கு இருக்கின்ற technology நாளைக்கு இல்லை. நாளைக்கு இருக்கிற technology மறுநாள் இல்லை. எனவே இப்போது Direct to Home - DTH. அதாவது ISDN line கூட வருங்காலத்தில் தேவையில்லாத ஒரு சூழ்நிலை ஏற்படும். Satellite மூலமாகக் கூட Video Conferencing வருவதற்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், வருங்காலத்திலே தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் எல்லோருமே one to one, face to face பார்த்துப் பேசுகின்ற அளவிற்கு ஒரு நிலைமை நிச்சயமாக ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 43, திரு. எம்.எஸ். சந்திரசேகரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

43—

## தெப்பக்குளம் தூர் வாருதல்

**•44415—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், வள்ளிமலை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் தெப்பக்குளத்தை தூர்வாரி செப்பனிட்டு அழகுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், வள்ளிமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான திருக்குளத்தின் படிக்கட்டுகள் அனைத்தும் கருங்கற்களால் கட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளன. திருக்குளத்தின் மூன்று பக்கங்களில் தென்னங்கன்றுகள் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேற்படி திருக்குளத்தில் சிறு சிறு மராமத்துப் பணிகள் அவ்வப்போது மேற்கொண்டு, குளத்தில் வருடந்தோறும் தெப்ப உற்சவம் நடைபெற்று வருகிறது. எனவே தற்போதைக்கு மேற்படி திருக்கோயிலின் திருக்குளத்தினை தூர்வாரி செப்பனிட வேண்டிய அவசியமில்லை. திருக்குளத்தினைச் சுற்றி சிமெண்ட் தளம் அமைக்கப்பட்டுள்ளதாலும், திருக்குளத்தைச் சுற்றி போதிய மண் தரைப்பகுதி இல்லாததாலும், திருக்குளத்தைச் சுற்றி மரம் செடிகள் வளர்த்து அழகுபடுத்த இயலாத நிலையுள்ளது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளிமலை ஸ்ரீ அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் ஆடிக் கிருத்திகையை முன்னிட்டு 3 நாட்களுக்கு தெப்பத் திருவிழா நடைபெறும். அவ்விழா நாட்களில் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்கின்றனர். தெப்பத் திருவிழா நடைபெறுகின்ற குளம் தூர் எடுக்க வேண்டிய நிலையிலுள்ளது. குளத்தைச் சுற்றி அழகுபடுத்த வேண்டிய நிலையிலுள்ளது. திருக்கோயில் வருமானத்தில் சீர் செய்ய முடியாத நிலையில் உள்ள காரணத்தால்



மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், திருக்கோயில் திருப்பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிற இந்த நல்ல வேளையில் வள்ளிமலை தெப்பக் குளத்தை சீர்செய்ய சிறப்பு நிதி வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளி பிறந்து, வளர்ந்து, திருமணம் நடந்த இடம் வள்ளிமலை ஆகும். அருணகிரிநாதரால் பாடப்பெற்ற தலம். மலைக் கோயிலில் நான்கு கால பூஜையும், கீழ்க் கோயிலில் ஒரு கால பூஜையும் நடைபெறுகின்றன. ஆடிக் கிருத்திகை, தெப்பம், கார்த்திகை தீபம், படிவிழா போன்ற விழாக்கள் இத்திருக்கோயிலில் நடைபெற்று வருகின்றன. இத்திருக்கோயிலின் வருவாய் 8 இலட்சத்து 65 ஆயிரத்து 494 ரூபாய் ஆகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான காலி மனைகளோ, கட்டடங்களோ இல்லை. இருந்தாலும் அந்தத் திருக்குளம் இப்போது நல்ல முறையில் செப்பனிடப்பட்டிருக்கிறது. மீண்டும் தூர் வார வேண்டும் என்று சொன்னால், வருகின்ற ஆண்டுகளில் மாவட்ட ஆட்சித் தலைவருடைய நிதியிலிருந்து தூர் வாருவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் மிகச் சிறப்பாக அந்தத் தெப்பக் குளத்தைக் கட்டித் தந்திருக்கிறார்கள். அந்தக் குளமானது இன்றைக்கு தூர் நிறைந்து மழை நீரைச் சேமிக்க முடியாத நிலைமையில் உள்ளது. தூர் வாரினால்தான் வருகிற மழைக் காலங்களில் அந்த நீரை முழுமையாகச் சேமித்து மிகச் சிறப்பாக அந்தக் குளத்தை அழகுபடுத்துகின்ற சூழ்நிலை ஏற்படும் என்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்பு நிதியினை ஒதுக்கி அந்தக் குளத்தைத் தூர் வாருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 1,552 திருக்கோயில்களுக்கும் குளங்கள் உள்ளன. அத்திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 2,235 திருக்குளங்கள் உள்ளன. அவற்றில் 976 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 1,145 திருக்குளங்கள் தற்சமயம் செப்பனிடப்பட்டு நல்ல நிலையில் உள்ளன. எஞ்சிய 576 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 1,090 திருக்குளங்கள் செப்பனிடப்பட

வேண்டியுள்ளன. இத்திருக்குளங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி கிராம வளர்ச்சித் திட்ட உதவியின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பணிகள் செய்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நிதி இல்லாத ஆலயங்களிலே மாவட்ட ஆட்சித் தலைவருடைய நிதியில் இருந்தும், மீதியிருக்கின்ற குளங்களை எல்லாம் அந்தந்த ஆலயங்களில் இருக்கின்ற நிதியைப் பொறுத்தும் தூர் வாருவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது வள்ளி பிறந்தது, வள்ளி மலை என்றார்கள். அதேபோல் தெய்வானை பிறந்தது எந்த மலை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரை அங்கே ஏதாவது கதாகாலட்சேபத்திற்கு கூப்பிட்டுச் செல்வதாக இருக்கிறார்களா? மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. வில்வநாதன்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி தமிழகத்திலே ஏற்பட்ட பிறகுதான் திருக்கோயில்கள் அனைத்தும் புத்துயிர் பெற்று புனரமைப்பு செய்யப்பட்டு ஒரு கால, இரண்டு கால, மூன்று கால, நான்கு கால பூஜைகள் நடைபெற்று வருகின்றன. மேலும், தமிழகம் முழுவதும் 6 ஆயிரம் கோயில்கள் செப்பனிடப்பட்டு, குடமுழுக்கு செய்து வருகிற இந்த நாளிலே, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து குளமும், குட்டைகளும் தூர் வாரப்பட்டு மிருகங்களுக்கும், ஆடு, மாடுகளுக்கும், மனிதர்களுக்கும் பயன்படும் வகையில் செப்பனிடப்பட்டு இருக்கின்றன. 108 வைணவத் தலங்களிலே முக்கியமான தலமான சோளிங்கர் ஸ்ரீ லட்சுமிநரசிம்ம சுவாமி கோயிலில் உள்ள தெப்பக் குளத்தைத் தூர் வாரி செப்பனிட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வில்வநாதன், தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 44, திரு. டி.கே. இராஜா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**44—**

## அவசர ஊர்தி

***18777—திரு. டி.கே. இராஜா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனைக்கு அவசர ஊர்தி மற்றும் அமரர் ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு தற்பொழுது ஓர் ஆம்புலன்ஸ் வாகனம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அமரர் ஊர்தி இல்லாமையால் தனியார் ஊர்திகள் மூலமாகவும், அவசர காலங்களுக்கு பேறுகால பின் கவனிப்பு திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ள ஊர்தியினைப் பயன்படுத்தி வருகின்றனர். மேலும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆணை பெற்று உடனடியாக அங்கே இருக்கக்கூடிய வாகனங்களில் ஏதாவது ஒன்றை அமரர் ஊர்தியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-20*

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இரண்டு திருப்பத்தூர் இருப்பதை மறந்துவிட்டார்கள். வேலூர் மாவட்டத்திலே, ஒரு திருப்பத்தூர் இருக்கிறது. என்னுடைய திருப்பத்தூரிலே, நான் கேள்வி போடும்போது அங்கே வேன் இல்லை. தற்போது வேன் இருக்கிறது. மூன்று வேன்கள் இருக்கின்றன.

ஆனால் ஒரே ஒரு டிரைவர்தான் இருக்கிறார். அந்த டிரைவரும் வேலூருக்கு மருந்து ஏற்றிச் சென்றுவிட்டால், அவரச நேரத்திலே அங்கே ambulance ஓட்டுவதற்கு டிரைவர் இல்லை. இதனால் அங்கே நோயாளிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். 145 பேர் வேலை செய்ய வேண்டிய அந்த மருத்துவமனையிலே, இப்பொழுது 40 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன, டிரைவர், கடைநிலை ஊழியர்கள் உட்பட. எனவே அந்த காலிப் பணியிடங்களை நிரப்பி, வருங்காலங்களிலே நோயாளிகள் பயன்படுகின்ற வகையிலே நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஒட்டுமொத்தமாக இருக்கக்கூடிய அரசு மருத்துவமனைகள் என்று எடுத்துக்கொண்டால், தலைமை மருத்துவமனையாக 29 அரசு மருத்துவமனைகளும், அதேபோல் வட்டம் வாரியாக எடுத்துக்கொண்டால் 159 வட்ட மருத்துவமனைகளும், வட்டம்சாரா மருத்துவமனைகள் என்று எடுத்துக்கொண்டால் 80 மருத்துவமனைகளும் இருக்கினறன. ஆக மருத்துவமனைகளுடைய அடிப்படை வசதிகளையெல்லாம் மேம்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்பொழுது உலக வங்கியிடம் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தி அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை—கடந்த ஒரு வாரத்திற்கு முன்னால் சுகாதாரத் துறையினுடைய செயலாளர் நேரடியாக டெல்லிக்குச் சென்று அதற்கான ஒப்பந்தத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத்—தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் கூறியதுபோல் தமிழகத்திலே ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட 808 ambulance-கள் இருக்கின்றன. இந்த 808 ambulance-களிலே இந்தியாவிலே முதன் முதலாக தமிழகத்திலேதான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் Life Saving Ambulance என்ற ஒரு திட்டத்தை, சென்னை பொது மருத்துவமனையிலும், அதற்கு அடுத்தாற்போல் ஸ்டேன்லிமருத்துவமனையிலும், அதற்கு அடுத்தாற்போல் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையிலும், மதுரை மருத்துவமனையிலும் கொண்டுவந்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், உலக வங்கியினுடைய திட்டத்தின் அடிப்படையிலே Taluk, non-taluk மற்றும் அரசு மாவட்ட மருத்துவமனையினுடைய திட்டங்களை - 30 படுக்கைகளைக் கொண்டது, 50 படுக்கைகளைக் கொண்டது, 150 படுக்கைகளைக் கொண்டது, 250 படுக்கைகளைக் கொண்டது என்ற





திட்டத்தையும்—வரையறுத்து, அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இப்பொழுது ஓட்டுநர் இல்லையென்று நீங்கள் சொன்னீர்கள். அதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இப்பொழுது ஒப்பந்த அடிப்படையிலே அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமரர் ஊர்தி கேட்டேன். தனியார் ஊர்திகளைப் பயன்படுத்துவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இங்கே தனியார் ஊர்திகளை நாடும்போது பல்லாயிரக்கணக்கான ரூபாயை அவர்கள் வாடகையாகக் கேட்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அளித்த பதிலை சற்றுப் புரிந்துகொள்ள வேண்டும். தனியார் என்ற வார்த்தையை நான் உபயோகிக்கவே இல்லை. Ambulance என்றுதான் சொன்னேன். நீங்கள் கூறியதுபோல் தனியார் என்று நான் சொல்லவேயில்லை. பொதுவாக எடுத்துக்கொண்டால். தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை அரசு மருத்துவமனைகளிலும் கிட்டத்தட்ட 808 ambulance-கள் இயக்கப்படுகின்றன. நீங்கள் mortuary வேன் கேட்கிறீர்கள். ஆனால் mortuary வேனைப் பொறுத்தவரையிலே 29 மாவட்ட மருத்துவமனைகளில் ஒவ்வொரு மாவட்ட மருத்துவமனைக்கும் ஒரு mortuary வேன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. உலக வங்கியினுடைய திட்டத்தை நிறைவேற்றும்பொழுது, மாவட்ட மருத்துவமனையாக இருந்தாலும், தாலுகா மருத்துவமனையாக இருந்தாலும், non-taluk மருத்துவமனையாக இருந்தாலும் அதனுடைய திட்டங்கள் மாறப்போகின்றன. கூடிய விரைவிலே அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. என்னுடைய திருப்பத்தூர் தொகுதி, வேலூர் மாவட்டத்திலே கடைகோடியாக இருக்கின்ற பகுதி. நாங்கள் மேல் சிசிச்சைக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், நூறு கிலோ மீட்டர் தொலைவிலேயுள்ள வேலூருக்குத்தான் செல்ல வேண்டும். தற்போது வேலூர் அரசு மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றது. அங்கே பிரசித்திபெற்ற சி.எம்.சி. மருத்துவக் கல்லூரி இருக்கின்றது. அருகிலே Apollo மருத்துவமனை விஷாரத்திலே வந்திருக்கின்றது.

இவ்வளவு வசதிகள் இருந்தும், வேலூருக்கு அடுத்தபடியாக இருக்கின்ற மிகப் பெரிய மருத்துவமனை, ஆண்டொன்றுக்கு 2,500 பேர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு செய்கின்ற மருத்துவமனை, அனைத்து வசதிகளும் கொண்ட மாவட்ட மருத்துவமனை அந்தஸ்து பெறக்கூடிய அந்த மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாக ஆக்க வேண்டுமென்று நான் 2001-லிருந்து குரல் கொடுத்து வருகின்றேன். ஆனால் வேலூர் பகுதிக்கு அந்த மாவட்ட மருத்துவமனை அந்தஸ்தைக் கொண்டு செல்கிறார்கள். எனவே எங்கள் பகுதியிலுள்ள திருப்பத்தூர் ஆஸ்பத்திரிக்கு மாவட்ட மருத்துவமனை அந்தஸ்து வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டினுடைய நடப்பை—மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், உங்களுடைய மாவட்டத்தினுடைய நடப்பைத்— தெரிந்துகொள்ளுங்கள். நானே உங்களுடைய அரசு மருத்துவமனைக்கு நேரடியாக வந்து, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரனும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஓர் ஆய்வுக் கூட்டத்தை நடத்தினோம். அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்திருந்தோம். அந்தக் கூட்டத்தில் நீங்கள் கலந்துகொள்ளவில்லை. அந்தக் கூட்டத்திலே நீண்டநாள் கோரிக்கையாக இருந்த வேலூர் மாவட்டத்தினுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கட்டளையிட்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்திலும் நீங்கள் கலந்துகொள்ளவில்லை. அன்றையதினம், உங்களுடைய மருத்துவமனைக்கு வருவதற்கு முன்னால் உங்களுக்கும் தகவல் கொடுத்தேன். அதிலேயும் நீங்கள் கலந்துகொள்ளவில்லை. கடைகோடியாக உங்களுடைய மருத்துவமனை இருக்கிறது. இடம் இல்லை, இடப் பிரச்சினை இருக்கிறது. இதையும் மீறி இடம் கொடுப்பதற்கு ஆளும் இல்லை. ஆகவேதான் மாவட்ட ஆட்சித் தலைவர், இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் ஆய்வுக் கூட்டத்திலே முடிவெடுக்கப்பட்டு மீண்டும் ஒரு முறை ஆய்வு செய்து, தற்சமயம், வேலூர் மாவட்டத்திலே இருக்கக்கூடிய வாலாஜாவிலே தலைமை மருத்துவமனை இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது ambulance பற்றியும், அதே போல mortuary van-ஐப் பற்றியும் சொன்னார்கள். இந்த van-களாக இருந்தாலும் அல்லது நீங்கள் ambulance-களைக் கொடுத்தாலும்கூட அவற்றிற்கு வழங்கப்படுகிற டீசல், 7 நாட்கள், 8 நாட்களுக்குள்ளாகவே எல்லா மருத்துவமனைகளிலும் தீர்ந்துவிடுகிறது. பிறகு டீசல் இல்லை என்கிற ஒரு சூழ்நிலை. சில நேரங்களிலே டிரைவர் இல்லை, சில நேரங்களில் டிரைவர் இருந்தாலும்கூட டீசல் இல்லை. அதற்கான வழிவகை எங்களிடம் இல்லையென்று சொல்லி அந்த மருத்துவமனைகள் அந்த ஊர்திகளை இயக்க முடியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கின்றன. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான ஒரு கணக்கீடு செய்து, மாதம் 30 நாட்களிலும்—இதுபோன்று ambulance அவசரமாகத் தேவைப்படுகிறபோதும் சரி, அல்லது mortuary van--இறப்பவர்கள் எப்போது வேண்டுமானாலும் இறக்கலாம், அப்படி இறக்கிறபோது அவர்களை, எளியவர்கள் ஊருக்கு எடுத்துச் செல்வதற்கு உகந்த வகையிலே நீங்கள் 30 நாட்களிலும்—டீசலை சப்ளை செய்யக்கூடிய அளவிற்கு நிதியை ஒதுக்கீடு செய்வீர்களா? அதேபோல, அதற்கான ஆணைகளை எல்லா ஆஸ்பத்திரிகளுக்கும் நீங்கள் வழங்குவீர்களா என்று அமைச்சரை தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு சட்டமன்றத்திலே கிட்டத்தட்ட 13.58 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது. உங்களுடைய மாவட்டம், வேலூர் மருத்துவமனைக்கு இரண்டு இலட்சம் ரூபாய், டீசலுக்காக நிதியைக் கொடுத்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், உங்களுக்கு நன்றாகத் தெரியும், ஒரு மருத்துவமனையிலிருந்து இன்னொரு மருத்துவமனைக்கு ambulance செல்லும்போது அது இலவசமாக எடுத்துச் செல்லப்படுகிறது. அதற்கு மேலாக நீங்கள் கூறியதுபோல், கடந்த ஆய்வுக் கூட்டத்திலே அதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பொது மருத்துவமனைகளுக்கு அவசர ஊர்தி மற்றும் அமரர் ஊர்தி சம்பந்தமான இப்பிரச்சினையிலே தாலுகா மற்றும் மலைப் பிரதேசப் பகுதிகளில் இறந்துபோகிறவர்களுடைய body-யைக் கொண்டு வருவதில் பெரிய பிரச்சினை சமீபத்திலேகூட ஏற்பட்டது. ஆகையினால்

அனைத்து பெரிய, நடுத்தர மருத்துவமனைகளுக்கும் mortuary van ஏற்பாடு செய்ய முடியுமா என்பது ஒன்று. இன்னொன்று. மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் எழுப்பியதுதான். கோவை அரசு பொது மருத்துவமனையில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் மூன்று வாகனங்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு ambulance இருக்கிறது, ஒரு டாடா சுமோ இருக்கிறது, இன்னொரு வாகனம் இருக்கிறது. இந்த மூன்றும் இப்போது பயன்படுத்தப்பட முடியாமல் கிடப்பிலேபோட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. என்ன காரணம் என்று சொன்னால், டீசல் இல்லாததால் பயன்படுத்த முடியவில்லை, மருத்துவமனையிலே பணம் கிடையாது. இதைச் சும்மா வைத்திருக்கிறோம். இவ்வாறெல்லாம் சொல்வதன் மூலமாக சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாக ஒதுக்கப்படுகின்ற நிதி தேவையில்லாமல் விரயம் ஆகிறது என்கிற நிலையை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகையினால் மருத்துவமனைகளில் குறைந்தபட்சம் இவற்றைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவருகிற வகையில் நிதி ஒதுக்கம் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** தலைவர் அவர்களே, தங்கள் கேள்வியிலே குற்றச்சாட்டு இருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய அன்பான வேண்டுகோள். நானே கோவை மருத்துவமனைக்கு வந்திருக்கிறேன். அங்கேயும் ஆய்வு நடத்தினேன். உங்களுக்கும் அழைப்பிதழ் அனுப்பினேன். கோவை மருத்துவமனை மட்டுமல்லாமல், வால்பாறையில்கூட நானே நேரடியாகச் சென்று அங்கே mortuary van இல்லையென்று சொன்னவுடனே, உடனடியாக புதியதாக ஒரு mortuary van அங்கே செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல், கோவையிலே சட்டமன்ற உறுப்பினரால் வழங்கப்பட்ட அத்தனை வாகனங்களுக்கும் டிரைவரும், அதே போல் டீசலும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.கே. செல்வராஜ்.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்களுடைய மேம்பாட்டு நிதியிலிருந்து பெறப்பட்டிருக்கின்ற வாகனங்களுக்கு பெட்ரோல்





வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மேட்டுப்பாளையம் அரசு தாலுகா மருத்துவமனையிலே இருக்கின்ற, சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து பெறப்பட்ட அந்த ambulance-க்கு F.C. செய்வதற்குக்கூட நிதி ஒதுக்கப்படாத காரணத்தினாலே அது பயன்படுத்தப்படாத நிலையிலே இருந்தது. நானே மற்றவர்களிடத்திலே சொல்லி, தொண்டு நிறுவனத்திடம் சொல்லி அதற்குப் பெற்றுத் தந்திருக்கிறேன். இதுபோல தமிழகத்திலே பல்வேறு மருத்துவமனைகளிலே நிலைப்பாடு இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை ஆய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ தங்கள் நிதியை இதுபோன்ற ஆம்புலன்ஸ்-க்கு ஒதுக்கியபொழுது—அங்கே இருக்கக்கூடிய அரசு மருத்துவமனை—உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், நீண்டநாளாக சிவகங்கை மாவட்டத்திலே இதுபோன்ற ஒரு பிரச்சினை இருந்தது—சிவகங்கை மாவட்டத்திலே இதுபோன்ற பிரச்சினை வரும்போது, அங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் அருமைச் சகோதரர் நேரடியாக என்னிடம் கூறியபோது அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்போதுதான் நீங்கள் இதைத் தெரிவித்திருக்கிறீர்கள். இதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருசில நேரங்களில், சென்னையிலுள்ள அரசு மருத்துவமனைகளில் அமரர் ஊர்திகளின் தேவை அதிகரிக்கும்போது, தனியாருக்குச் சொந்தமான அமரர் ஊர்திகள் பயன்படுத்தப்படுகின்றன. அத்தகைய சமயங்களில் தனியார் அமரர் ஊர்திகள் அதிகக் கட்டணம் வசூலிப்பதால், ஏழை எளிய மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அரசு மருத்துவமனைகளில் பயன்படுத்துகின்ற தனியார் அமரர் ஊர்திகள், அரசு மருத்துவமனைகளில் பதிவு செய்யப்பட்டு, செல்கின்ற தூரத்திற்கு ஏற்றாற்போல் வாடகை நிர்ணயம் செய்துதர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2004 நவம்பர் 19

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்தவரையில், சென்னைக்கும், சென்னையைச் சுற்றி இருக்கும் நகரங்களுக்கும் கிலோமீட்டருக்கு 9 ரூபாய் வாங்க வேண்டும் என்றும், அதற்கு வெளியே செல்லும்போது கிலோமீட்டருக்கு 4¼ ரூபாய் வாங்க வேண்டும் என்றும் ஒரு வரையறையைத் திட்டி வைத்திருக்கின்றோம். அதைத் தனியார் நிறுவனங்களுக்கும் நாங்கள் சொல்லி இருக்கிறோம். ஆகவே இதுபோன்று அதிகமாக ஏதாவது தொகை கேட்டால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உடனடியாக அதைப்பற்றித் தெரிவிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே 808 ஆம்புலன்ஸ் வேன்கள் இயங்குவதாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதிலே பெரும்பான்மையான ஆம்புலன்ஸ் வேன்களுக்கு ஓட்டுநர்கள் இல்லை என்ற குறைபாடு இருக்கிறது. அதை நீக்க நம்முடைய அமைச்சர் முன்வருவாரா என்று தங்கள் மூலம் கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு மாதத்திற்கு முன்னால்தான் இதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு--ஒப்பந்த அடிப்படையிலே House nursing அவர்கள் ஆங்காங்கு இருக்கக்கூடிய—மருத்துவக் கல்லூரியாக இருந்தால், மருத்துவக் கல்லூரி, அதேபோல சுகாதாரத் துறையாக இருந்தால்—சுகாதாரத் துறை சார்பாக அவர்கள் ஒப்பந்தத்தை செய்துகொண்டு, படிப்படியாக எல்லாவற்றையும் நாங்கள் இப்பொழுது ஒப்பந்த அடிப்படையில் விட்டுவிட்டோம். அதேபோல் இதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். குறைந்தது 2 மாதத்திற்குள்ளாக அத்தனை காலி இடங்களும் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 45, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.



2004 நவம்பர் 19]

45—

## மருத்துவர் மற்றும் செவிலியர்

**•56122—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் அரசு மருத்துவமனைக்கு மருத்துவர்கள், செவிலியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் அரசு மருத்துவமனையில் 6 மருத்துவர்களும், 10 செவிலியர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, எத்தனை மருத்துவர், எத்தனை செவிலியர் என்று சொல்வது எங்களுக்குப் புரியவில்லை. எனக்குப் புரியவில்லை. தெளிவாக அவர் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டு, அதன் பிறகு உங்களுக்கு என்னுடைய துணை வினாவைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** தலைவர் அவர்களே, நான் இதுவரையிலும் மருத்துவர்களைப் பற்றி சொல்லவே இல்லை. அரசு மருத்துவமனையைப் பற்றித்தான் சொன்னேன். நீங்கள் முதலில் புரிந்துகொள்ளுங்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் (குறுக்கீடு) நீங்கள் கேட்ட கேள்வி, இப்பொழுதுதான் மருத்துவர்களைப் பற்றி கேள்வி கேட்கிறீர்கள். இதுவரையிலும் கேட்ட கேள்விகளுக்கு மருத்துவர்கள் என்று நான் எங்கே சொன்னேன்? உங்கள் குமாரபாளையம் மருத்துவமனையிலே ஒரே ஒரு டாக்டர் vacancy தான் உள்ளது. தமிழ்நாட்டிலே ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டால்—நான் இப்பொழுது விளக்கம் கொடுக்கிறேன். தமிழகத்திலே— மருத்துவர்களின் எண்ணிக்கை 77,333. இந்த 77,333 மருத்துவர்களில் இறந்தவர்கள், வெளி நாட்டுக்குச் சென்றவர்களையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட 62 ஆயிரம் மருத்துவர்கள் இருக்கிறார்கள். நீங்கள் கூறியதுபோல Taluk மருத்துவமனைகள், Non-Taluk மருத்துவமனைகள்

[2004 நவம்பர் 19

மற்றும் இருக்கக்கூடிய மாவட்ட மருத்துவமனைகளில் வேலை பார்க்கக்கூடிய மருத்துவர்களின் எண்ணிக்கை 2,222. தற்சமயம் ஒட்டுமொத்தமாக இருக்கக்கூடிய காலி இடங்கள் 126. தங்களுடைய கோரிக்கை இருக்கக்கூடிய தாலுகா மருத்துவமனையில் மொத்தம் ஒரு vacancy தான் இருக்கிறது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை தயவுசெய்து நீங்களாவது படித்துப்பார்க்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு) மருத்துவர்கள், செவிலியர்களைப் பற்றிதான் இந்தக் கேள்வியே. அதைப்பற்றி நான் சொல்லவில்லை என்று அமைச்சர் சொல்கிறார். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள், செவிலியர்களை நியமிக்க ஆவன செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறீர்கள். எத்தனை மருத்துவர்கள் இருக்கிறார்கள், எத்தனை செவிலியர்கள் இருக்கிறார்கள் என்று அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார். அடுத்து துணைக் கேள்வி கேட்கும்போது கேளுங்கள்.

முற்பகல் 10-35

**திரு. ஐ. கணேசன்:** எத்தனை மருத்துவர்களைப் போட்டார்கள் என்று தெரியவில்லையே. எத்தனை மருத்துவர்களைப் போட்டார்கள் என்று தெரிந்தால்தானே துணைக் கேள்வி கேட்க முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 6 மருத்துவர்கள் இருக்கிறார்கள். 10 செவிலியர்கள் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** பதில் கொடுத்திருக்கிறேன். அதற்கு மேல் என்ன வேண்டும் என்று சொல்கிறார்? ஒட்டுமொத்தமாகக் கேட்கிறீர்களா? அல்லது உங்கள் குறிப்பிட்ட மருத்துவமனைக்குக் கேட்கிறீர்களா? நான் அப்போதே சொல்லிவிட்டேன்.

**திரு. ஐ. கணேசன்:** இந்தப் பதில் ஒட்டுமொத்த மருத்துவர்களைப் பற்றியா, குறிப்பிட்ட மருத்துவர்களைப் பற்றியா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** இல்லை. நீங்கள் கேட்ட கேள்வி குமாரபாளையம் மருத்துவமனை பற்றித்தான். நீங்கள் தமிழ்நாட்டுக்குக் கேட்கவில்லை. குமாரபாளையம் அரசு



2004 நவம்பர் 19]

மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட 7 மருத்துவர்களில் 6 மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 10 செவிலியர் பணியிடங்களில் 10 செவிலியர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும் 24 இதர பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து கேளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை. இதுமாதிரி சொல்வதால்தான் மற்றவர்கள் பதில் சொல்வதில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமாரபாளையம் என்னுடைய தொகுதி அல்ல. என்னுடைய பக்கத்துத் தொகுதி. நம்முடைய நிதி அமைச்சர் தொகுதி. நான் அங்கே சென்றபோது மருத்துவர்களும், செவிலியர்களும் மிகக் குறைவாக இருப்பதாக என்னிடத்தில் விண்ணப்பங்கள் கொடுத்தார்கள். அதன் அடிப்படையில்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். அதற்காக நியமித்து இருக்கிறேன் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நன்றி. அதேபோல தாலுகா மருத்துவமனையான எடப்பாடி மருத்துவமனையிலே, அதேபோலத்தான் சொல்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதேபோல்தான் எல்லா ஊரும். குமாரபாளையம் மாதிரிதான் எல்லா ஊரும். அமைச்சரிடம் பதில் இருக்காது. நீங்கள் அதற்காக தனிக் கேள்வி போடுங்கள். குமாரபாளையம் மருத்துவமனை தொடர்பாக வேறு ஏதாவது துணைக் கேள்வி கேட்பதாக இருந்தால் கேளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இன்னும் குமாரபாளையம் மருத்துவமனையில் எத்தனை மருத்துவர்கள் நியமிக்கப்பட வேண்டும், எப்போது நியமிப்பீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் நீண்டகாலமாக உறுப்பினராக இருக்கிறார். நானும் நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்திருக்கிறேன். கேட்கப்பட்ட கேள்விக்கு சிறந்த முறையிலே பதில் அளித்துக்கொண்டிருக்கிறேன். உங்களுடைய கேள்விகள் என்ன என்று தெளிவுபடுத்தி அதற்கும் பதில் கொடுத்திருக்கிறேன். நீங்கள் கேட்ட கேள்வியிலே இதற்குப்பதில் வரவில்லை என்றால் (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். ஒட்டுமொத்தமாக பதிலைக் கேட்டாலும் நான் சொல்லத் தயாராக இருக்கிறேன். நீங்கள் கேட்ட கேள்விக்கு

ஒட்டுமொத்தமாக விளக்கத்தைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடிய மாவட்ட மருத்துவமனையாக இருந்தாலும், அரசு மருத்துவமனையாக இருந்தாலும், இதுவரை எடுத்துக்கொண்டால் பணியாளர்களை நியமிக்க உலக வங்கியின் மூலம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் எல்லாம் *30* படுக்கைகள், *50* படுக்கைகள், *100* படுக்கைகள், *150* படுக்கைகள், *500* படுக்கைகள் என்று மாற்றி, அங்கே இருக்கக்கூடிய மக்கள்தொகையின் அடிப்படையில் மருத்துவர்களையும், செவிலியர்களையும் நியமிப்பதற்கு உலக வங்கியின் நிதி கூடிய விரைவில் ஜனவரி மாதம் கிடைக்கும். முதலாவதாக 5 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். இருக்கக்கூடிய மருத்துவமனைகள் அத்தனையும் தரம் உயர்த்தப்படும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது நீங்களும் நீண்ட நாள் உறுப்பினர், நானும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன் என்று பதில் சொன்னார். அதற்காக அவருக்கு நான் நன்றி சொல்லிக்கொள்கிறேன். கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்பது ஒரு மரபு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், கேள்விக்கு வாருங்கள். கேள்வி நேரத்தைப் பற்றி விவாதம் இல்லை.

வினா எண் *46*, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**46—**

## கோரைப்பாய் தொழில்

***13121—திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதியில் தமிழ்நாட்டிலேயே கோரைப்பாய் பின்னும் தொழில் அதிகமாக நடைபெறுவதால், அங்கு கோரைப்பாய் தொழிற்சாலை ஒன்று அமைத்துத் தர அரசு முன்வருமா?





**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரணி போற்றும் தங்கத் தாரகையாம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திசை நோக்கி வணங்கி, *2003* ஆம் ஆண்டு கூட்டத் தொடரில் இந்த மாமன்றத்திலே என்னுடைய தொகுதியான முசிறி பேரூராட்சியில் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையத்தை இயக்கிட மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தங்களின் வாயிலாக கோரிக்கை வைத்தேன். உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணை வழங்கி தற்போது பேருந்து நிலையம் இயங்கிவருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறி தொகுதியில் அடங்கிய பல்வேறு கிராமங்களில் கோரைப்பாய் பின்னும் தொழில் குடிசைத் தொழிலாக நடைபெற்று வருகிறது. இத்தொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்கின்ற மிகவும் சாதாரண ஏழை மக்கள். இவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில், அரசு மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், முசிறி தொகுதியில் அடுத்த ஆண்டாவது கோரைப்பாய் பின்னும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ்நாட்டிலேயே முசிறி தொகுதியில்தான் கோரைப்பாய் தொழில் அதிகமாக உள்ளதால் அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு தனியாக தொழிற்சாலை வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரையின்படி, கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் செயல்படுத்தப்படும் அனைத்துத் தொழில்களுக்கும் முன்னுரிமை அளித்து வாரியம் செயல்பட்டு வருகிறது. ஆனால் கோரைப்பாய் செய்யும் தொழில், கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் வருவதால், மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையக் குழுவால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட அந்தத்

தொழில்கள்தான் செய்ய வேண்டுமென்கிற திட்டத்தினை மாற்றியமைத்த பிறகு, கடன் மற்றும் மானியம் எந்தவொரு தொழிலுக்கும் வழங்குவதில்லை. கதர் கிராமத் தொழில் ஆணையக் குழுவால் அறிமுகப்படுத்தப்பட்ட கிராமத் தொழில்களுக்கு விளிம்புத் தொகை மானியம் வழங்கும் திட்டம், கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் செயல்பட்டு வருகிறது. கதர் கிராமத் தொழில் திட்டத்தின்கீழ், ஆர்வமுள்ள தனி நபர்கள் கூட்டாகச் சேர்ந்து ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் பதிவு செய்து, அதன்மூலம் பாய் உற்பத்தி செய்திட தேவைப்படும் மூலதனத்தை நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளில் கடனாகப் பெறுவதற்கு முசிறி தொகுதியிலே இருக்கக்கூடியவர்கள் முன்வந்தால், கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் நிச்சயமாக தொழிற்சாலை அமைவதற்கு வாரியம் உதவும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரை பயிரிடும் விவசாயிகளுக்கும் மற்றும் கோரைப்பாய் பின்னும் உற்பத்தியாளர்களுக்கும் கடன் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா? அப்படியிருப்பின், எவ்வளவு பேர் பயன் பெற்றுள்ளார்கள் என அறிய விரும்புகிறேன். விளிம்புத் தொகை வழங்கும் திட்டம் எந்தெந்தத் தொழில்களுக்கு எவ்வளவு கொடுக்கப்படுகின்றது என்பதையும் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையத்தினால் வரையறுக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி கிராமிய கைவினைஞர்களுக்கு உதவும் வகையில், கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், விளிம்புத் தொகைத் திட்டம் என்னும் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், கிராமப்புறங்களில் தொழில் தொடங்கிட தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு, கதர் கிராமத் தொழில் ஆணையத்தால் அதிகபட்சமாக 30 சதவீதம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. கதர் கிராமத் தொழில் ஆணையத்தினால் அடையாளம் கண்டுள்ள 119 கிராமத் தொழில்கள் இந்தத் திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற தகுதி உடையனவாகும். இந்தத் திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களிலுள்ள 1,120 பயனாளிகளுக்கு இதுவரை 474.60 இலட்சம் ரூபாய் விளிம்புத் தொகை மானியமாக வாரியத்தினால் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரைப்பாய் என்பது மனிதனுடைய உடலுக்கு மிகத் தேவையானது. விஞ்ஞானபூர்வமாகவும், கோரைப்பாயில் படுத்தால் மனிதனுடைய இரத்த ஓட்டம் சீராகும் என்பதுடன், ஒரு நோய் நொடியில்லாமல், பொதுவாக ஹார்ட் அட்டாக்கே வராமலிருப்பதற்கு கோரைப்பாயில் படுப்பது நல்லது என்றுகூட மருத்துவர்கள் சான்றிதழ் அளிக்கிறார்கள். அதேமாதிரி, கோரைப்பாய் என்று சொன்னால், காரமடைப் பாய் என்பது தமிழ்நாட்டிலேயே, மிக உயர்ந்த பாய். அந்தப் பாய் இன்றைக்கு உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, பத்தமடை (குறுக்கீடு) பத்தமடை.

**திரு. ஜி. பழனிசாமி:** பத்தமடை, காரமடை இரண்டு இடங்களிலும் தயாரிக்கிறார்கள். இரண்டு பாய்களுமே அநேகமாகப் பார்த்தோமானால், ஒரு பாயினுடைய விலை 5,000 ரூபாயைத் தாண்டி விற்பனை செய்யப்படுகிறது. ஆகையாலே பாய் தொழில் பண்ணுவதற்கு அரசு 50 சதவீதம் மானியம் கொடுத்து, சுயஉதவிக் குழுக்களுக்கு ஊக்கம் அளித்தால் மாற்றுத் தொழிலுக்கு ஒரு வாய்ப்பிருக்கும். இதை சமூக நலத் துறை மூலமாகச் செய்வதற்கு அரசு முயற்சிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் சொந்தமாக கோரை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் பணியை மேற்கொள்ளவில்லை. மாறாக, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக உற்பத்தி செய்கின்ற கோரைப்பாய்களை விற்பனை செய்வதற்கான வழிமுறைகளை மட்டும்தான் வாரியம் வகுத்துத் தருகிறது. யாராவது கோரைப்பாய் தொழில் செய்யக்கூடியவர்கள் தனி நபர்களாகக் கூட்டுச் சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவீர்கள் என்று சொன்னால், வாரியம் மானியம் வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[2004 நவம்பர் 19

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

## 1. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (அ) தேசிய ஒருமைப்பாடு தின உறுதிமொழி—பேரவை சிறிது நேரம் ஒத்திவைக்கப்பெறுதல்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேசிய ஒருமைப்பாடு தினத்தையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலை 11-00 மணிக்கு தலைமைச் செயலக பிரதான கட்டடத்திற்கு அருகேயுள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் உறுதிமொழி செய்து வைக்க ஏதுவாக பேரவை தற்போது ஒத்திவைக்கப்படுகின்றது.

பேரவை மீண்டும் முற்பகல் 11-15 மணிக்குக் கூடி எஞ்சிய அலுவல்களை மேற்கொள்ளும்.

பின்னர், பேரவை முற்பகல் 10-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

முற்பகல் 11-15 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 3. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. காவிரி டெல்டா பகுதிகளில் கால்வாய்களைத் தூர் வாராததால்...

**திரு. ஜி.கே. மணி:** முக்கியமான பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து...

**திரு. மு.பெ. சாமிநாதன்:** கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன்.



2004 நவம்பர் 19] [பேரவைத் தலைவர்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளப்படுகின்றது. (குறுக்கீடுகள்) ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. எல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. இன்றைக்கே மூன்று சிறப்புக் கவன ஈர்ப்புகளை எடுத்துக்கொள்கிறோம். இரண்டு கவன ஈர்ப்புகளை எடுத்துக்கொள்கிறோம். (குறுக்கீடுகள்) மற்றவை எல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) காவிரி டெல்டா பகுதிகளில்...

### (ஆ) திருப்பூர் சாயப்பட்டறை கழிவுநீர், நொய்யல் ஒரத்துப்பாளையத்தில் கலப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு

**திரு. மு.பெ. சாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு அறிவிப்பு குறித்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே அறையிலே சொன்னீர்கள். (குறுக்கீடு) திரு. சாமிநாதன், ஏற்கெனவே என்னுடைய அறையிலே சொன்னீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) என்னுடைய ஆய்வில் இருக்கிறது. நான் என்ன என்று பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்புதான் எடுத்துக்கொள்ளப்படுகிறது. (குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்படுகிறது. மற்றைய தீர்மானங்கள் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. சாமிநாதன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் திரு. சாமிநாதன். (குறுக்கீடுகள்) என்ன, திரு. துரைமுருகன், என்ன பிரச்சினை? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சாமிநாதன் அவர்கள் கொடுத்திருக்கிற கவன ஈர்ப்பு அறிவிப்பினை இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கருதுகிறார். ஏனென்று கேட்டால், அதில் ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. நொய்யல், ஒரத்துப்பாளையத்தில் காவிரியினுடைய உப நதி ஒன்று, அதில் அணை கட்டியிருக்கிறார்கள். திருப்பூரிலிருந்து, இந்த சாயப்பட்டறைகளிலிருந்து வெளியேறுகிற நீரும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு) எடுத்துக்கொண்ட பிறகு நீங்கள் விளக்குங்கள்.

**திரு. துரைமுருகன்:** இல்லை. சொல்லிவிடுகிறேன். இந்த நீரெல்லாம் அங்கே தேங்குகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதும் முக்கியமான சிறப்புக் கவன ஈர்ப்புகள்தான்.

**திரு. துரைமுருகன்:** சாயப்பட்டறை தண்ணீரெல்லாம் நொய்யல், ஒரத்துப்பாளையத்தில் தேங்குகிற காரணத்தால், அதை காவிரியில் விடுகிறபோது, குடிக்கவும் முடியாது. பாமர மக்களுக்கு, விவசாயத்திற்கு, பயிருக்கு பயன்படாது. ஆகையினாலே அதை எதிர்த்து, இன்றைக்கு எல்லாக் கட்சிகள் சார்பிலும், ஆயிரக்கணக்கானோர் இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஏனென்றால் உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடுத்த..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை எடுத்ததற்குப் பிறகு அதைப்பற்றிப் பேசலாம். (குறுக்கிடு) எடுத்ததற்குப் பிறகு பேசலாம். இன்றைக்கு எடுப்பதும் முக்கியமான தீர்மானம்.

**திரு. துரைமுருகன்:** உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை அமல்படுத்தும்படி கேட்கிறார்கள். எனவே, இன்றைக்கு அதை எடுத்தால்தான் அந்தப் பகுதியிலே இருக்கிற எம்.எல்.ஏ. இங்கே பேசியதாக இருக்கும். இன்றைக்கு உண்ணாவிரதம் இருந்து நாளைக்கு எடுத்தால் குதிரை போனதற்குப் பிறகு லாயத்தை பூட்டுவது போல் ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) திங்கட்கிழமை எடுத்துக்கொள்ள முடியுமா என்று யோசிக்கிறேன். (குறுக்கீடுகள்) திங்கட்கிழமை எடுத்துக்கொள்ள முடியுமா என்று பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் உடனடியாக அப்படிக் கேட்கக் கூடாது. (குறுக்கீடுகள்) அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. உடனடியாக அப்படி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்கக் கூடாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த நேரத்தில் அதுகுறித்து அவையில் விவாதிப்பது முறையாக இருக்காது என்று நான் கருதுகிறேன். உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பிற்குப் பிறகுதான் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எழுப்பிய பிரச்சினைக்கு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அந்தக் கவன ஈர்ப்பு முடிந்தது.



## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) காவிரி டெல்டா பகுதிகளில் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம் மற்றும் மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. காவிரி டெல்டா பகுதிகளில் கால்வாய்களைத் தூர் வாராததால் பயிர்கள் சேதம் அடைந்தது மற்றும் அண்மையில் தமிழகத்தில் பெய்த மழையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் மற்றும் பொது மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், திரு. சி. ஞானசேகரன், திரு. ஜி. பழனிசாமி, திரு. வை. சிவபுண்ணியம், திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், (குறுக்கீடுகள்) முடித்துவிடுகிறேன், திரு. துரைமுருகன், முடித்துவிடுகிறேன்——திரு. எம். ராம்குமார், திரு. என்.ஆர். ரங்கராஜன், திரு. கோ.சி. மணி, திரு. இ. புகழேந்தி, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், திரு. அ. அசோகன், திரு. ஜி.கே. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. கே.சி. கருணாகரன், திரு. என். நன்மாறன், திரு. டி. மணி, திரு. கே. மகேந்திரன் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானமாகவும், திரு. லா. சந்தானம், திரு. சோ. இராசேந்திரன் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாகவும், திரு. ஜெக. வீரபாண்டியன், திரு. மு. கார்த்தி, திரு. கோ. இரவிராஜ், திரு. ஐ. கணேசன், திரு. துரை. கி. சரவணன், திரு. ப. அரசன் ஆகியோர் கவன ஈர்ப்பு அறிவிப்பாகவும் கொடுத்துள்ளார்கள். (குறுக்கீடுகள்) இவ்வளவு பேர் கொடுத்திருக்கிற பிரச்சினையை எடுத்திருக்கிறேன். நீங்கள் இதில் போய் தகராறு பண்ணுகிறீர்கள். இவற்றைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் அவர்களைப் பேச அழைக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. கோ.சி. மணி. (குறுக்கீடுகள்) அண்ணன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

மற்ற பாதிப்புகளும் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக, சாலைகள் என்பதே இன்றையதினம் பயணம் செய்வதற்கே லாயக்கற்ற நிலை ஏற்பட்டிருக்கின்றன. நெடுஞ்சாலைகள், ஊரகச் சாலைகள், இணைப்புச் சாலைகள், ஒன்றியச் சாலைகள் முழுவதும் பாழாகி விட்டன. போக்குவரத்துக்கே தடை ஏற்பட்டிருக்கிறது. இதுபோன்ற நிலைமையில் குடியிருப்புகள் முழுவதுமாக சேதம் அடைந்துள்ளன, பல பகுதிகளிலேயும். ஒரு பக்கத்தில் மழை பெய்ததால் மகிழ்ச்சி என்றாலும் கூட, அடுத்த பக்கத்தில் ஏற்பட்டிருக்கின்ற பாதிப்பினை சீரமைக்க முடியாத நிலைமை இருக்கிறது. அரசாங்கமே இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். சமுதாயத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற பெரிய இழப்பு. இதற்கு முதற்கட்டமாக ரூ.5 கோடி தமிழக அரசு ஒதுக்கியிருக்கிறது. ஆனால் மத்திய அரசிடம் ரூ.413 கோடி கேட்டிருக்கிறது. அப்படியானால் இந்த அரசு ஒதுக்கியிருப்பது யானைப் பசிக்கு சோளப்பொரி கொடுப்பதுபோல இருக்கின்றது. உடனடியாகச் செய்ய வேண்டிய இடத்தில் இருக்கிற அரசு ஒன்றும் செய்யாமல் இருக்கிறது. பொதுவாக பல நிவாரண நிதிகளை அரசு உருவாக்கி வைத்திருக்கின்றது. Natural Calamity Fund—இயற்கைச் சீற்றப் பேரிடர் நிவாரண நிதி என்று இருக்கிறது. பொது நிவாரண நிதி இருக்கிறது. C.M.'s Fund. C.M.'s Public Relief Fund இந்த இரண்டும் தவிர—எதிர்பாராச் செலவுக்கு என்று, எதிர்பாராச் செலவு நிதியம்-Contingency Fund இருக்கிறது. இவற்றிலிருந்து தேவையான தொகையை உடனடியாக. . . . .

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களுக்கு நிவாரணப் பணிகள் மேற்கொள்ள நிதியுதவி வேண்டுமென்று பாரதப் பிரதமர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதி, அந்தக் கடிதத்தையே பத்திரிகைகளில் வெளியிட்டிருந்தோம். அதில் தெளிவாக மாநில அரசிடம் இருக்கின்ற "Calamity Contingency Fund" தீர்ந்துபோய் விட்டது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆகவே, இந்த இயற்கைச் சீற்றங்களால் ஏற்படுகின்ற சேதங்களுக்கு நிவாரணப் பணிகள் மேற்கொள்வதற்காகவே இருக்கின்ற Contingency Fund, Calamity Contingency Fund தீர்ந்துபோய் விட்டது என்பதால்தான் மாநில அரசிடம் இருக்கின்ற நிதியிலிருந்து ஒரு 5 கோடி ரூபாயை ஆரம்பப் பணிகளுக்காக ஒதுக்கியிருக்கின்றோம். Chief Minister's Public Relief Fund என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். Chief Minister's Public Relief Fund ல் எப்போதும் ஒரு 4 கோடி, 5 கோடி ரூபாய்தான் இருக்கும். அது எதற்கும் போதாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** Calamity Relief Fund-லே நிதி இல்லையென்று சொன்னார்கள். Natural Calamity Fund. அதே நேரத்திலே C.M.'s Public Relief Fund-லே 3, 4 கோடிதான் இருக்கிறது. அதிகம் இல்லை என்று சொன்னார்கள். எதிர்பாராத செலவு நிதியம் என்பது நாம் வேறு புதுப் பணிகளுக்கு, வேறு இடத்திலே பணம் எடுக்கவில்லை என்று சொன்னால், முடியவில்லை என்று சொன்னால், அதை எதிர்பாராத செலவு நிதியிலிருந்து எடுக்க வேண்டும். அதற்கு ஒரு குறிப்பிட்ட தொகை இருந்தாலும் நாம் நினைத்த நேரத்தில் எல்லாம் அவசரச் சட்டம் பிறப்பித்து அந்த நிதியத்தையே corpus அதிகம் செய்துகொள்கிறோம். அதுதான் நம்முடைய நடைமுறையாக இருந்து வந்திருக்கிறது. (குறுக்கீடு) Yes. (குறுக்கீடு) இல்லை. (குறுக்கீடு) அதைப் பெரிது பண்ணலாம், அதிகரிக்கலாம்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை. (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Contingency Fund கடந்த 3, 4 மாத காலமாக, பட்ஜெட் ஒதுக்கீடு இல்லாமல், ஏழை மக்களுக்காக பல சலுகைத் திட்டங்களை அறிவித்ததற்காக ஒதுக்கப்பட்டிருப்பதையும் அவை அறியும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அறிய வேண்டும். இதில் மிக முக்கியமாக, இப்படி வெள்ள நிவாரணம் என்று வருகிறபோது, உடனடியாக மாநில அரசுகளுக்கு உதவ வேண்டிய கடப்பாடு மைய அரசுக்கு இருக்கிறது. எப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களுக்குச் சேவை செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்களோ, அப்படி மக்களின் வாக்குகளைப் பெற்று டெல்லியிலே நாடாளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக இருக்கின்ற அந்த மைய அரசைப் பொறுத்தவரைக்கும், உடனடியாக Calamity Relief Fund மூலமோ, மற்ற உதவிகள் மூலமாகவோ, மாநில அரசுக்கு பணத்தைத் தரவேண்டும். பணத்தை அச்சடிக்கின்ற நிலையில் இருக்கின்ற அவர்கள், நம்மைவிட அதிக நிதி வருவாய் பெற்றிருக்கின்ற அவர்கள், உடனடியாக அந்த நிதியை ஒதுக்கித் தரவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதிய பிறகும்கூட இன்னும் காலதாமதம் செய்வது மைய அரசுதான் என்பதை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மத்திய அரசிடமிருந்து நிதி கேட்பது தவறு இல்லை. நாங்களும் உங்களோடு சேர்ந்து குரல் கொடுக்கிறோம். ஆனால் உங்களுக்கு என்று ஒரு கடமை இருக்கிறது.

களத்திலே நீங்கள்தான் நிற்கிறீர்கள். வெறும் 5 கோடி ரூபாயைக் கொடுத்துவிட்டு போர்க்கால அடிப்படையிலே நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம் என்று சொன்னால், நகைப்புக்கு இடமாக இருக்காதா? ஆயுதமே இல்லாமல் போர்க்களத்திலே இறங்குவது மாதிரி இருக்கிறது. இது எப்படி சாத்தியம்? அதுமட்டுமல்ல எங்களிடம் நிதியே இல்லை என்று சொன்னார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெறும் ரூபாய் 5 கோடியோடு இல்லை. பணிகள், நிவாரணப் பணிகள், என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, எது எதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை இறுதி விடையிலே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அளிக்க இருக்கிறார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்தார்கள். அந்த நிதிநிலை அறிக்கையினுடைய செயல்பாடு குறித்து சட்டப் பேரவையில் 2004-2005 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தினையொட்டிய வரவுகள் மற்றும் செலவுகள் நிலை குறித்த ஆய்வு என்று இந்த அவையிலே வைத்திருக்கிறார். இதிலே பாசனம் மற்றும் வெள்ளக் கட்டுப்பாடு என்கிற தலைப்பில் ரூபாய் 539.53 கோடி ஒதுக்கியிருக்கிறீர்கள். 6 மாத காலத்திலே எவ்வளவு செலவு செய்திருக்கிறீர்கள் என்று சொன்னால் ரூபாய் 88.01 கோடி. அதாவது 16.31 சதவீதம்தான் செலவழித்திருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்ல. அந்த 88 கோடி ரூபாய் தவிர, கையிலே எவ்வளவு இருப்பு இருக்கிறது என்று சொன்னால் ரூபாய் 451.52 கோடி மிச்சம் இருக்கிறது. உரிய நேரத்திலே நடவடிக்கை எடுத்திருக்க முடியாதா? வெள்ளம் வரும் என்று எதிர்பார்க்கக்கூடாதா? வறட்சி என்றால் நிரந்தரமாக வறட்சிதான் இருக்குமா? வெள்ளம் வந்தால் அதைத் தடுப்பது எப்படி? ஏன் தூர் வாரவில்லை? ஏன் வாய்க்கால்களைத் தூர் எடுக்கவில்லை? ஏன் கோட்டங்களுக்கு எதுவும் செய்யவில்லை? அப்படியே நின்று போய்விட்டது. பெரிய புகார்கள் எல்லாம் புகார்ப் பட்டியல்களாக வந்துகொண்டிருக்கின்றன. ஏன் செய்யவில்லை? செய்யாததற்கு என்ன காரணம்? அதற்கெல்லாம் முன்பே நீங்கள் நடவடிக்கை எடுத்திருப்பீர்களேயானால், நன்றாக இருந்திருக்கும். வெள்ளக் கட்டுப்பாட்டுக்கு எவ்வளவு செலவு செய்தீர்கள்? இப்போதுகூட செலவு





செய்யலாம். வெள்ளம் வந்ததற்கு அப்புறம்கூட வெள்ளக் கட்டுப்பாட்டிற்குச் செலவு செய்யலாம். இதில் ஒன்றுமே செலவு செய்தது மாதிரி தெரியவில்லை.

அதேமாதிரி வேளாண்மை மற்றும் அதனுடைய தொடர்புடைய பணிகள் என்ற பெயரிலே ரூபாய் 622.51 கோடி ஒதுக்கியிருக்கிறீர்கள். எவ்வளவு செலவாகியிருக்கிறது, இந்த 6 மாத காலத்திலே? ரூபாய் 72.92 கோடிதான் செலவழித்திருக்கிறீர்கள். அப்படியென்றால் 12.52 சதவீதம்தான் செலவழித்திருக்கிறீர்கள். மிச்சம் எவ்வளவு இருக்கிறது? ரூபாய் 549.59 கோடி கையிலே இருக்கிறது. ஏனென்றால், இருப்பதிலே மிகக் குறைவாகச் செலவு செய்திருக்கிறீர்கள். எதற்குச் செய்திருக்கிறீர்கள் என்று சொன்னால், வேளாண்மை மற்றும் அதனுடைய தொடர்புடைய பணிகளுக்காக, மிகக் குறைவாக 12.52 சதவீதம்தான்.

அதேமாதிரி பாசனம் மற்றும் வெள்ளக் கட்டுப்பாட்டுக்கு 16.31 சதவீதம்தான் செலவழித்திருக்கிறீர்கள். ஆகவே இருப்பதே மிகக் குறைவு. அதாவது, ஊரிலே பழமொழி சொல்வார்கள். 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் பூசாரி' என்று சொல்வார்கள். அதேபோல் இந்த அரசுக்கு இளைத்தவர்கள் விவசாயிகளாக இருக்கிறார்கள். அதனால்தான் நீங்கள் செலவு செய்யாதது மட்டுமல்ல, அதுவேதான் சரி என்று சொல்லி இங்கே வாதிட்டுக்கொண்டிருக்கிறீர்கள். கொஞ்சமாக இருக்கிற நிதியையும் தாராளமாகச் செலவு செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஏதோ பதில் சொல்கிறார். சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது வேளாண்மைத் துறையில் செலவினங்கள் குறைவாகச் செய்யப்பட்டிருக்கின்றன என்கிற ஒரு கருத்தை வலியுறுத்தியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பொறுத்தமட்டிலே நல்ல அனுபவம் வாய்ந்த உறுப்பினர். கடந்த 6 மாத காலமாக, ஏன் 3 ஆண்டுகாலமாக வறட்சி இருந்த காரணத்தினாலே, அதிலும் குறிப்பாக நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் மாதத்திலேயிருந்து ஏறக்குறைய 2 மாத காலத்திற்கு முன்பாகத்தான் ஓரளவிற்கு வருண பகவான் கருணை காட்டியிருக்கின்ற காரணத்தினாலே, வறட்சியாலே பெரும் அளவுக்கு வேளாண் பணிகள் சம்பந்தமான பணிகளுக்குண்டான செலவினங்களை

மேற்கொள்ளவில்லை என்பதையும், தற்போது வருண பகவான் கருணை காட்டியிருக்கின்ற காரணத்தாலே, விவசாயிகளுக்குச் சேரவேண்டிய மானியத் தொகைகள் மற்றும் பல்வேறு சலுகைகள் வழங்குவதற்குண்டான வாய்ப்புகளை மாண்புமிகு அம்மா அவர்கள், போர்க்கால அடிப்படையிலே மேற்கொள்ள வேண்டுமென்று உத்தரவு வழங்கியிருக்கின்றார்கள் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி., இன்னும் 5, 6 உறுப்பினர்கள் பேச வேண்டும். இன்னும் 3 சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புகள் எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இதோ முடித்துவிடுகிறேன். அதாவது, Prevention is better than cure. அதனால்தான் வெள்ளக் கட்டுப்பாட்டிற்கு நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள். ஏன் அதைச் செலவு செய்யவில்லை என்றுதான் நான் கேட்டேன். அதுமட்டுமல்ல. மாநிலத்தின் நிதி நிர்வாகத்தைச் சிறப்பாகக் கையாளுவதாக இந்த அரசு மார் தட்டுகிறது. ஆனால் பேரழிவு நிவாரணத்திற்கு நிதி ஒதுக்குவதற்கு பணம் இல்லை என்று கைவிரித்திருக்கிறது. அதுமட்டுமல்ல.** இதிலே கொஞ்சம் அதிக கவனம் செலுத்தியிருக்க வேண்டும், செலுத்த வேண்டுமென்று நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆக, நிவாரணமாக முழுமையாக சேதமடைந்த பயிர்களுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு 8 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். வேலையில்லாத விவசாயக் கூலிகளுக்கு ஒரு மாதத்திற்கு இலவச அரிசி வழங்க வேண்டும். வீடு இடிந்து முழுச் சேதம் அடைந்தவர்களுக்கு அரசு அறிவித்திருக்கும் 2 ஆயிரம் ரூபாய்க்குப் பதிலாக, 5 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார். **

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதாவது, இப்போது அந்த இடத்திற்குப் போய், இந்த இடத்தை நான் விடவும் விரும்பவில்லை. **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று குறிப்பிடுகிறார். ** என்பதை மாண்புமிகு உறுப்பினர் தெளிவுபடுத்த வேண்டும். **

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** துணை மானியக் கோரிக்கை பற்றிப் பேசும்போது, அதை நான் விரிவாகப் பேசுகின்றேன். இப்போது (குறுக்கீடுகள்) ஏன், என்ன இப்போது? துணை மானியக் கோரிக்கையில் பேசும்போது நான் விரிவாகப் பேசுகின்றேன். இப்போது இதிலே முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணை மானியக் கோரிக்கையிலே பேசும்போது இந்தக் குற்றச்சாட்டைச் சொல்லி, அதற்கு விளக்கம் சொல்லுங்கள். இப்போது அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சரி. ரூபாய் 2 ஆயிரத்திற்குப் பதிலாக ரூபாய் 5 ஆயிரமும், பகுதி சேதமடைந்த வீடுகளுக்கு அறிவித்திருக்கிற 1,000 ரூபாய்க்குப் பதிலாக ரூ. 2500-ம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கடலோர மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கு இலவச அரிசி வழங்க வேண்டும். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு மாற்று இடங்களுக்கு குடியமர்த்தப்பட்டிருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசே உணவு வழங்க வேண்டும். மழை நீர் வடியாத பகுதிகளில், வடிகால் மற்றும் வாய்க்கால்களை, நவீன இயந்திரங்களின் உதவிகொண்டு ஆக்கிரமிப்புகளை அகற்றி வெள்ள நீர் வடிய உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைத்துச் சாலைகளையும் போர்க்கால அடிப்படையில் புதுப்பிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். நிவாரணப் பணிகளில் எந்தவிதப் பாகுபாடும் காட்டாமல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நிவாரணப் பணிகள் சென்றடைய அரசு உதவி செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அந்தந்தத் துறைகளைச் சேர்ந்த வேளாண்மை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்கள் உடனடியாகச் சென்று பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும். நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப் பணித் துறை அதிகாரிகள், அந்தந்தப் பகுதிகளில் முகாமிட்டு பணிகளை மேற்பார்வையிட வேண்டும். மழை, வெள்ளத்தால் உயிரிழந்தவர்களுடைய குடும்பங்களுக்கு குறைந்தபட்சம் ஒரு இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்க வேண்டுமெனக் கேட்டு, நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருந்த கவன ஈர்ப்பு அறிவிப்பின்மீது அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக நான் சில குறிப்பிட்ட கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். குறிப்பாக, ஒரு மாத காலமாக இடைவிடாது தொடர்ந்து மழை பெய்து, அதனால் வெள்ளச் சேதம் ஏற்பட்டு, கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், கடலோரப் பகுதிகளில் இருக்கிற மீனவர்கள் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை பத்திரிகைச் செய்திகளும் மற்றும் போகிற இடங்களில் கேட்கிற செய்திகளும் ரொம்பவும் மனச் சங்கடம் அளிப்பதாக இருக்கின்றது.

அதோடு மட்டுமல்ல, உயிர்ச் சேதமும் ஏற்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் என்ன காரணம் என்று பார்க்கிறபோது, கலைஞர் ஆட்சியிலே தூர் வாரப்பட்ட ஆறுகள், ஏரிகள், வாய்க்கால்கள், அதிலே ''A' பிரிவு, 'B' பிரிவு வாய்க்கால்கள், இவை அத்தனையும் அப்படியே விடப்பட்டு, சமீபகாலத்தில் தூர் வாரியதாகச் சொல்லப்பட்டு, தூரே வாராமல் இருந்த காரணத்தால், இந்த வெள்ளத்தைத் தடுக்கமுடியாமல் ஆகிவிட்டது. அத்துடன் மட்டுமல்லாமல், அதிலே இறந்து போனவர்களுக்கு அளிக்கக்கூடிய உதவித்தொகையும், வீடு இழந்தவர்களுக்குக் கொடுக்கக்கூடிய தொகையும், அதைச் சரி செய்து கொள்வதற்குச் சமமாக இல்லை. எப்படியோ ஒரு வீட்டைக் கட்டிக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் அதற்கு 5,000 ரூபாய் தேவை. சாதாரண வீடாவது கட்டாமல் இருக்க முடியாது. இன்றைக்கு அறிவித்து இருக்கிற தொகை ரொம்ப குறைவு. அதோடுமட்டுமல்லாமல் எத்தனை தரம் மழை பெய்தாலும் வடிகால்களைச் சீரமைத்தால்தான் நிச்சயமாக எந்த மழையிலும் இந்த ஜில்லாக்களைக் காப்பாற்றலாம். தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூர் ஆகிய பகுதிகள் டெல்டா பகுதிகள். இந்த டெல்டா பகுதிகளில் உள்ள வடிகால்கள் எவ்வளவு முக்கியம் என்பதை இப்போது நீங்கள் நன்றாக உணர்ந்திருப்பீர்கள் என்று கருதுகிறேன். இதுவரையில் இல்லாவிட்டாலும் இனிமேலாவது அந்த வாய்க்கால்களைத் தூர் வாருகின்ற பணியைச் செவ்வனே செய்வதற்கு, அதற்கு உரிய தொகையை ஒதுக்கீடு செய்து, உரிய காலத்தில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 11-35

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்ததிலிருந்து அவரும் குறுவையைப் பார்த்ததில்லை, நாங்களும் குறுவையைப் பார்த்ததில்லை. என்ன காரணம்? வறட்சி. விவசாயிகளுடைய நிலையே வறட்சியைக் காட்டி நிவாரணம் கேட்பதும் (குறுக்கீடு) குறுவை சாகுபடி முதல் சாகுபடி அடுத்த சாகுபடி சம்பா, அந்த குறுவையை அறுத்துவிட்டு நடுவது தாளடி. குறுவை சாகுபடியை அவரும் பார்த்ததில்லை, நாங்களும் பார்த்ததில்லை. அதற்கு என்ன காரணம்? வறட்சி தொடர்ந்து இருந்ததால் நான்கு ஆண்டு காலத்தில் குறுவையை நட முடியவில்லை, சம்பாவையும் நட முடியவில்லை. ஏதோ இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட விளைவு இன்றைக்கு மழை வந்து, அதிலும் அங்கு பெய்த பெருமழையால் அந்த அணை நிரம்பப்பட்டு—உரிய காலத்தில் மேட்டூர் அணை திறந்திருந்தால்கூட இன்னொரு 15 நாட்களுக்கு முன்பு இந்த சம்பாவை நட்டிருக்கலாம் இந்த மழையால் பாதிக்கப்படாமல் இருந்திருக்கலாம்—அதுவும் சற்று......

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறுவையும் காணவில்லை, சம்பாவையும் காணவில்லை என்று இங்கே சொன்னார்கள். 2002-ல் பருவ மழை பொய்த்ததன் காரணமாக கர்நாடக அரசு காவிரியில் நமக்குத் தரவேண்டிய நீரைத் தராத காரணத்தால் அங்கே குறுவை பயிரிட முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. அப்போதுகூட மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக தஞ்சைக்குச் சென்று அங்கே சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளையும் கூட்டிச் சென்று, நீண்ட ஆய்வு செய்து, 164 கோடி ரூபாய் என்ற அளவிற்கு வறட்சி நிவாரணத் திட்டப் பணிகளை அங்கே அறிவித்தார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். நீங்கள் உட்காருங்கள். அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** குறுவை பாதிக்கப்பட்ட காரணத்தினால் வேலை இல்லாமல் இருந்த தொழிலாளர்களுக்கு வேலைக்கு உணவு வழங்குகின்ற திட்டத்தின் அடிப்படையில் அங்கு வேலை தொடங்கப்பட்டு, குறுவை பாதிக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் அத்தனை பேருக்கும் வேலை உறுதி வாய்ப்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து சம்பாவும் பாதிக்கப்பட்டபோது, இதய

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2004 நவம்பர் 19

தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காவிரி நீர் பாயக்கூடிய 9 மாவட்டங்களுக்கும் 217 கோடி ரூபாயை வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்கித் தந்தார்கள். சம்பா பாதிக்கப்பட்ட அந்த ஏழை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை உறுதி செய்யப்பட்டது. வேலை இழந்த அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைத் தொடர்ந்து நாம் பல்வேறு வகையான வறட்சி நிவாரணப் பணிகளை இங்கே எடுத்திருக்கிறோம். அதை நான் என்னுடைய விளக்கத்தில் தெளிவாகக் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் சரியாக செய்யப்படவில்லை என்பது என் கருத்து. அறிவிப்புக்கும், நடவடிக்கைக்கும் தொடர்பே கிடையாது, சம்பந்தமே கிடையாது. அறிவித்ததோடு சரி. யார் யாருக்கு கொடுக்கப்படும் என்று அறிவித்தார்களோ அவர்களுக்கு எல்லாம் உரிய நேரத்தில் போய்ச் சேரவில்லை, சேர்ந்ததாக சில பேர் தெரிவித்தாலும்கூட அவர்களுக்கும் அது போதுமானதாக இல்லை.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 2002-ல் நடைபெற்ற வேலை சரியாக நடைபெறவில்லை என்று 2004-ல் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இதுவரை அரசுக்கு அந்தமாதிரியான குறைபாடுகள், குறைகள்—எங்கும் இல்லை என்ற கோரிக்கையோ, புகாரோ—இதுவரை அரசிடம் பெறப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கோ.சி. மணி:** கொஞ்ச நேரம்தான் பேசப் போகிறேன். நான் பேசிய பிறகு அவர் பதில் சொன்னால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள். பேசுங்கள்.

**திரு. கோ.சி. மணி:** நான் குறிப்பிடுவது அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப் போல, பனிக்கட்டி போல ஒவ்வொரு இடத்திற்கும் போய் அது கடைசியில் போய் இரண்டு சொட்டு சேர்ந்தது மாதிரிதான் அந்த நிவாரணங்களும் போய்ச் சேர்ந்திருக்கின்றன. இப்போது



2004 நவம்பர் 19] [திரு. கோ.சி. மணி]

இறந்துபோனவர்களுடைய குடும்பத்திற்கு அரிசி கொடுப்பதாக, 50,000 ரூபாய் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அதெல்லாம் போதாது. ஒரு இலட்சம் ரூபாயாவது அவர்களுடைய குடும்பத்திற்குக் கொடுத்து உதவினால்தான் இந்தக் காலகட்டத்தில் அது சரியாக இருக்கும். அதையும் நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். நான் குறிப்பிட்டுச் சொல்வது—இனிமேலாவது கால்வாய்கள், ஏரிகள், "A" பிரிவு வாய்க்கால்கள், "B" பிரிவு வாய்க்கால்கள் ஆகியவற்றை உடனடியாகச் செப்பனிட்டு இந்த நீர்ப்பாசனத் திட்டத்தை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 11-40

தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலும், பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த நேரத்திலும், எல்லா அதிகாரிகளையும், அதாவது, பொதுப் பணித் துறை அதிகாரிகள், விவசாய அதிகாரிகள், மற்றபடி கூட்டுறவுத் துறை அதிகாரிகளையும்கூட அழைத்துக்கொண்டுபோய், அந்த ரெகுலேட்டரிலே நிறுத்திக்கொண்டு, அந்த ரெகுலேட்டரினுடைய கொள்ளளவு, அது பாய்கின்ற இடம், இவற்றையும் பார்வையிட்டு, அவர்களுக்குரிய நிவாரணத்தை அங்கேயே அறிவித்தார். அந்தச் செய்திக் குறிப்புகள் இந்த அரசிடமும் இருக்கிறது. அதேபோல நீங்களும் செய்ய வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் செய்ய வேண்டுமென்பது, எனக்காக மட்டுமல்ல, இங்கே இருக்கிற மற்ற உறுப்பினர்களுக்கும்கூட. தஞ்சை மாவட்டம், புதுக்கோட்டை பகுதி வரையில், அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற அனைத்துக் கட்சித் தோழர்களும் இதை மனதில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சியாக இருக்கின்ற காரணத்தால், நாங்கள் இதை எடுத்துச் சொல்கிறோம். ஆகவே ஏற்றமிகு பணி செய்தோம் என்று வெறும் ஏட்டளவில் எழுதிப் படித்துவிட்டுப் போகக்கூடாது, நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் கடந்த மூன்றாண்டு காலமாக வறட்சியினுடைய கோரப்பிடியிலே சிக்கித் தவித்து, தமிழ்நாட்டிலே விவசாயிகள் மற்றும் உள்ள பல்வேறு தொழிலைச் சார்ந்தவர்களெல்லாம் பஞ்சத்தில் பிழைப்பதற்காக அண்டை மாநிலங்களுக்குச் சென்று தினக்கூலி செய்து

வறட்சியிலே சிக்கித் தவித்தார்கள். ஆனால் அந்த வறட்சி நிலை மாறுகின்ற சூழ்நிலைக்கு முன்னாலே, சமீபத்திலே கடுமையாகப் பெய்த மழையினாலே, தமிழகம் பரவலாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. பரவலாக என்று சொல்கின்ற நேரத்திலே, தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூர் போன்ற காவிரிப் பாசன டெல்டா மாவட்டங்கள்தான் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த மாவட்டங்களிலே பயிர் செய்தார்கள். காவிரியிலே மேட்டூர் அணைக்குத் தண்ணீர் வந்து, சிறிதளவு திறந்துவிடப்பட்ட நேரத்திலே பயிர் செய்தார்கள். அதிலேகூட, வறட்சியால் பாதிக்கப்பட்டவர்கள் பயிர் செய்ய வழியில்லாமல், நகை நட்டு, பாத்திரம் பண்டங்களையெல்லாம், நிலத்தின் மீதும் அடகு வைத்து, கடன் வாங்கி, பயிர் செய்தார்கள். இப்படிக் கடன் வாங்கி பயிர் செய்த அந்தப் பயிர், கடுமையான மழையால் பாதிக்கப்பட்டு, முழுவதுமாகச் சேதம் அடைந்துவிட்டது. ஆகவே வறட்சியாலே பாதிக்கப்பட்ட விவசாயி கடன் வாங்கினார். பயிர் வைத்தும், பயிர்ச் சேதம் அடைந்து, இப்பொழுதும் பாதிக்கப்பட்ட நிலையிலே, அந்த டெல்டா மாவட்ட விவசாயிகளுடைய நிலைமை இருக்கிறது. இன்னும் பல்வேறு இடங்களிலே வீடுகள் இடிந்து விழுந்திருக்கின்றன. உயிர்ச்சேதமும் ஏற்பட்டிருக்கிறது. கால்நடைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்த டெல்டா மாவட்டங்களில் இந்தச் சூழ்நிலை உருவானதற்கு என்ன காரணம் என்று சொன்னால், அங்கே வாய்க்கால்களெல்லாம் தூர் வாரப்படாத நிலை. ஒழுங்காக வாய்க்கால்கள் தூர் வாரப்பட்டிருக்கும் என்று சொன்னால், வந்த நீர் வாய்க்கால்களின் மூலமாக கடலுக்குச் சென்றிருக்கும். ஆகவே இந்தச் சூழ்நிலைகளைக் கருத்திலே கொண்டு, இருக்கக்கூடிய வாய்க்கால்களைக் கட்டாயம் தூர் வார வேண்டும்.

அதே நேரத்திலே, இந்த மழையினாலே, பரவலாக மாவட்டங்களிலே, சாலைகள் முழுவதுமாகப் பழுதடைந்திருக்கின்றன. பத்திரிகைகளிலே வாகன விபத்துக்குக் காரணம், சாலை பழுதடைந்திருக்கிறது என்று செய்தி வந்திருக்கிறது. ஆகவே பழுதடைந்த சாலைகளை முழுமையாகச் செப்பனிடுவதற்கு கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும். உயிரிழந்தோர் குடும்பத்திற்கு நிதி ஒதுக்க வேண்டும். நெற்பயிர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறைந்தபட்சம் ஏக்கருக்கு 8,000 ரூபாயாவது நிவாரணம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த விவசாயிகளுடைய வாழ்க்கையிலே புத்துயிர் ஏற்பட வேண்டுமென்று சொன்னால், மீண்டும் பயிரிடுவதற்கு அல்லது விவசாய வேலைகளைத் தொடங்குவதற்கு அரசாங்கத்திலே கடன் வழங்க வேண்டும். இப்பொழுது எல்லா வங்கிகளுக்கும் போகிறார்கள். டெல்டா மாவட்ட விவசாயிகள்,



கூட்டுறவு வங்கிகளுக்கு, அரசுக்குச் சொந்தமான மற்ற வங்கிகளுக்குப் போனால், அங்கே கடனே தரப்படுவதில்லை. மத்திய அமைச்சர் சொல்கிறார்; இங்கே மாநில அமைச்சர், அரசு அதிகாரிகளெல்லாம் சொன்னாலும்கூட, உண்மை நிலைமை, கூட்டுறவு வங்கிகளிலே கடன் வழங்கப்படவில்லை. ஆகவே கடன் கேட்கக்கூடிய விவசாயிகள் அனைவருக்கும் நிபந்தனையில்லாமல் கடன் வழங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

அதே நேரத்திலே, இங்கே செம்பரம்பாக்கம் ஏரி இருக்கிறது. இவ்வளவு மழை பெய்திருக்கிறது என்று சொல்கிறோம். ஆனால் செம்பரம்பாக்கம் ஏரிக்குத் தண்ணீரே வரவில்லை. என்ன காரணம் என்று சொன்னால், வரத்து வாய்க்கால்களெல்லாம், தூர்வாரப்படாமல் மூடிக் கிடக்கின்றன. அந்தப் பணிகளை உடனடியாக நாம் மேற்கொள்ள வேண்டும். இன்னும் பார்த்தீர்களென்றால், இவ்வளவு மழை பெய்தது என்று சொல்கிறோம். தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் ஆகிய மாவட்டங்கள், சேலம் மாவட்டத்தினுடைய ஒரு பகுதியிலெல்லாம் மழையே இல்லை. கிணற்றுக்குக்கூட தண்ணீர் வரவில்லை. இன்னும் அங்கே வறண்ட நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. குடிநீர்ப் பஞ்சம்கூட இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பஞ்சத்தில் பிழைப்பதற்கு வறட்சிக் காலத்திலே சென்றவர்கள், இப்பொழுதும் பெங்களூர் மற்றும் கர்நாடக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதிகளுக்கு வறட்சி நிவாரணத் தொகை கட்டாயம் வழங்க வேண்டும். டெல்டா மாவட்ட விவசாயிகள், கடலூர் மற்றும் மீனவ கிராமப் பகுதிகளுக்கு, அங்கு முழுச் சேதாரத்தையும் ஈடுகட்டுகின்ற வகையிலே வெள்ள நிவாரணம் வழங்க வேண்டும். வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் போன்ற மாவட்டங்களுக்கு வறட்சி நிவாரணத் தொகை கூடுதலாக வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கேகூட குடிநீர்ப் பஞ்சம் இன்னமும் அதிகமாக இருக்கிறது. இன்றைக்கு என்னுடைய தருமபுரி தொகுதியிலே, பெண்ணாகரம், தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் போன்ற மாவட்டங்களில் பரவலாக இன்னும் குடிநீர்ப் பஞ்சமே போகவில்லை. ஆகவே இவற்றையெல்லாம் கருத்திலேகொண்டு இந்த வறட்சி நிவாரணப் பணி மேற்கொள்கிற இதே வேளையில், நீங்கள் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டுமென்கின்ற கோரிக்கையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து அமர்கிறேன்.

[2004 நவம்பர் 19

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தஞ்சை டெல்டா என்று சொல்லப்படுகிற பகுதியிலே இருக்கிற விவசாயிகள் 2001-லிருந்து தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நாடு நன்கு அறியும், இந்த அவையும் நன்கு அறியும். 2001-லிருந்து ஏறத்தாழ 2003 வரை கடுமையான வறட்சி காரணமாக அவர்கள் பாதிக்கப்பட்டு, இப்போது 2004 வருகின்ற நேரத்திலே கடுமையான வெள்ளச் சேதத்திலே அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல இலட்சம் ஏக்கர் விவசாயம் செய்யப்பட்ட நிலங்கள் இன்றைக்கு பாதிக்கப்பட்டு மிகச் சிரமத்திலே அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் நன்கு அறிவீர்கள். இந்த நேரத்திலே தகுந்த நிவாரணம் அந்த விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. அந்த முறையிலேதான் இந்தப் பிரச்சினையை அரசினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். இந்த அரசு மத்திய அரசைப் பார்த்து 411 கோடி ரூபாய் நிவாரணமாகக் கேட்டிருக்கிறது என்பதைப் பத்திரிகைகள் மூலமாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம். நிச்சயமாக மத்திய அரசு அந்த நிதியைக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம். ஆனால் நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், சென்ற காலத்திலே நமக்குக் கிடைக்க வேண்டிய நிதியை மத்திய அரசிடமிருந்து பெற நம்மால் முடியவில்லை. இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சரால் கொடுக்கப்பட்டிருக்கிற துணை நிதிநிலை அறிக்கையிலேகூட என்ன சொல்லப்படுகிறது என்றால், சென்ற 2003-2004 ஆம் ஆண்டிலே 1743.94 கோடி ரூபாய் கிடைக்க வேண்டிய இடத்திலே நாம் பெற்றுக்கொண்டது ரூபாய் 554.85 கோடி. ஆகவே தொடர்ந்து மத்திய அரசு நமக்குத் தர வேண்டிய நிதியைப் புறக்கணித்துக்கொண்டிருக்கிற அல்லது குறைத்துக் கொடுத்துக்கொண்டிருக்கிற நிலை மாற்றப்பட வேண்டும். இன்று தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற இந்தத் துயரம் என்பதிலே நிச்சயமாக மாநில அரசுக்கு மட்டுமல்ல, மத்திய அரசுக்கும் பொறுப்பு உண்டு. மத்திய அரசும் தகுந்த உதவியைச் செய்ய வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

இந்த நேரத்திலே ஒன்றை மாநில அரசிடம் சுட்டிக்காட்ட விரும்புவது, இறந்தவர்களின் குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்



50 ஆயிரம் ரூபாயை 23 பேருக்கு நிவாரணமாக வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று பத்திரிகைகளில் படித்தோம். அதற்கு மேலேயும் பல பேர் இறந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் அந்த நிவாரணம் கொடுக்கப்பட வேண்டும். அதுமட்டுமல்ல. வீடுகளை இழந்து பல பேர் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு 500 ரூபாய், 1,000 ரூபாய் என்று Revenue Department-லிருந்து நிவாரணமாகக் கொடுக்கப்படுகிறது. அதை வைத்துக்கொண்டு வீடு கட்டிக்கொள்ள முடியாத நிலையில் அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். வீட்டினைத் திரும்பக் கட்டி தங்குவதற்கு போதுமான அளவிற்கு தகுந்த உதவி கொடுக்கப்பட வேண்டும்.

அதேபோல சாலைகளும் மிகவும் மோசமான அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. சாலைகளை மட்டும் சரி செய்வதற்கே ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலே தேவைப்படும் என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே அதற்கு மத்திய அரசிடமிருந்து தகுந்த நிதியைப் பெற்றும் மாநில அரசும் அந்தச் சாலைகளை அபிவிருத்தி செய்யக்கூடிய கடமையிலே இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். இதைச் சொல்கிற நேரத்தில் நான் ஒன்றைச் சுட்டிக்காட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏற்கெனவே இந்த விஷயத்திற்காக மாநில அரசால் 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போதாது என்பது மட்டுமல்ல, இன்று மக்களால் சொல்லப்படுகின்ற ஒரு கருத்தையும் இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ** ஆகவே இதை நான் குறையாகச் சொல்வதற்கு வரவில்லை. ஆனால் இன்று மக்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்றால், ...

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்,**

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் அந்த விஷயத்திற்கு—அதாவது,** உள்ளே வரவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், ** இப்போது வெள்ள நிவாரணத்திற்கு, 5 கோடி ரூபாய் மட்டும் ஒதுக்கியிருப்பது நியாயம்தானா, சரிதானா என்று விவசாயிகள் கேட்கிறார்கள். அவர்கள் கேட்பது நியாயம் அல்லவா என்று அரசு சிந்திக்க வேண்டாமா? (குறுக்கீடுகள்) இந்த நேரத்திலே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெற்றால்தான் முடியுமென்ற நிலையை நாம் ஏற்படுத்திக்கொள்ள முடியாது. அவர்களிடமிருந்து

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

அதைப் பெறுவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவற்றை நாங்கள் ஆதரிக்கிறோம். அதிலே எங்களைப் பொறுத்தவரையிலே, மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் மாநில அரசு, இப்போது மத்திய அரசைக் காட்டி, அல்லது மத்திய அரசு மாநில அரசைக் காட்டி, விவசாயிகளுக்கு வெகு துயரத்தை ஏற்படுத்துவது சரியல்ல. இரண்டு அரசுகளும் இணைந்து, உடனடியாக விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கு மாநில அரசு, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மாநில அரசு, பல விஷயங்களிலே, அந்த முறையிலே உள்ள நடவடிக்கைகளை எடுப்பதிலே ஏதோ தயக்கம் காட்டுகிறது என்று நான் சொல்லவில்லை. ஆனால் சரியான முறையிலே நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த வெள்ளச் சேதத்தைப் பற்றிய சில கருத்துகளை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். இதற்குத் தொடர்பு இல்லாத பேச்சுக்கள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இந்த மாதிரியுள்ள ** அதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாங்கள் இந்த நேரத்திலே வலியுறுத்தி, அதன்வழியில், வெள்ளச் சேதத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற நம்முடைய மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் இங்கே பேசியது, மிகவும் கண்டனத்திற்குரியதாகும்; வருத்தத்திற்குரியதாகும். அதுமட்டுமின்றி, சம்பந்தமே இல்லாமல், ** வெள்ள நிவாரணப் பணிகளுக்கு வெறும் 5 கோடி ரூபாய் மட்டும்தானா என்று கேட்டால், வெறும் 5 கோடி ரூபாயோடு இந்த அரசு நிறுத்தப் போவதில்லை. ஆரம்பப் பணிகளுக்காக, ஒரு அச்சாரமாக Advance தொகையாக இந்த 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான். கடந்த 3 ஆண்டுக் காலமாக, கடும் வறட்சியால் இந்த மாநிலம் பாதிக்கப்பட்டபோது, விவசாயிகள் எல்லாம் துயரடைந்தபோது, அவர்களுடைய துயரைத் துடைப்பதற்காக, நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் கோடி ரூபாய்களை இந்த அரசு செலவழித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போலவே இப்போது வெள்ள நிவாரணப் பணிகளுக்கும், இந்த அரசு தேவையான பணத்தைச்

**மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



செலவு செய்யும். இதைப்பற்றியெல்லாம் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் இந்த அரசுக்குத் தேவையில்லாத அறிவுரைகளை வழங்கத் தேவையில்லை; தேவையில்லாத குற்றச்சாட்டுகளைக் கூறுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 35 நாட்களுக்கும் மேலாகப் பெய்திருக்கிற வட கிழக்குப் பருவ மழையினுடைய தாக்கத்தால், திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், கடலூர் போன்ற மாவட்டங்கள் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றன. மேலும், பலமாவட்டங்கள் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. சில மாவட்டங்களிலே, இந்த மழை தேவையானதாகவும் இருந்திருக்கிறது. அதை மறுக்க முடியாது. ஆனால் எங்களது திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சை ஆகிய மாவட்டங்கள், கடந்த 3 ஆண்டுகளாக வறட்சிக் கொடுமைக்குள்ளாக்கப்பட்ட மாவட்டங்கள். இந்த ஆண்டு, ஓரளவு நம்பிக்கையோடு சாகுபடிப் பணிகளிலே ஈடுபட்ட விவசாயிகளுக்குப் பேரிடியாக விழுந்துவிட்டது இந்த மழை வெள்ளம். இதனுடைய பாதிப்பாலே, பல இலட்சக்கணக்கான ஏக்கர் சம்பா பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 35 தினங்களாக நீரில் மூழ்கியிருக்கின்ற அந்தப் பயிர்கள், மீள முடியாத நிலைக்கு ஆட்பட்டு, விவசாயிகள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த மாவட்டத்தைப் பற்றிய தனி சிறப்புக் கவனத்தை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த...

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். வெள்ள நிவாரணப் பணிகளுக்காக தற்போது மாநில அரசு 5 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது என்றால், அது உடனடித் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியாகும். மேலும் நிதி வேண்டுமென்று மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம். ஆனால் அந்த நிதி வரும் வரை மாநில அரசு காத்திருக்கப் போவது இல்லை. தேவையான வெள்ள நிவாரணப் பணிகளுக்கு நிதியை மாநில அரசே ஒதுக்கி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இந்த அறிவிப்பை நான் வரவேற்கிறேன். அதைத்தான் அந்த மாவட்ட மக்களும் எதிர்பார்க்கிறார்கள். குறிப்பாக இந்த பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிற விவசாயிகள் தொடர்ந்து பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். தொடர்ந்து கூட்டுறவுக் கடன் சுமைக்கு ஆளாக்கப்பட்ட விவசாயிகள் இந்த ஆண்டு கடன் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்த நிலையில் கூட்டுறவு வங்கிகளின் மூலமாக கடன் கிடைக்காத ஒரு துர்பாக்கியமான நிலை ஏற்பட்டது. மத்திய அரசின் மூலமாக, வங்கிகளின் மூலம் கடன் வழங்கப்பட்டது ஓரளவு விவசாயிகளுக்கு திருப்தி அளித்தாலும், அதுவும் போதுமானதாக இல்லை என்பதை நாங்கள் பல சந்தர்ப்பங்களிலே வலியுறுத்தியிருக்கிறோம். கூட்டுறவு வங்கிகளிலே கடன் கொடுக்கவில்லை என்ற அந்தப் பிரச்சினைக்கு ஒரு காரணத்தை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன். குறிப்பாக, நமது (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் பேசும்போது, கூட்டுறவு வங்கிகளிலே கடனே கொடுக்கப்படவில்லை என்று பொத்தாம்போக்காகப் பேசினார்கள். கடும் வறட்சியால் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பாதிக்கப்பட்டதற்குப் பிறகு, மத்திய அரசினுடைய நபார்டு வங்கியானது விவசாயிகளுக்கு வழங்கியிருக்கிற பயிர்க் கடனை மாநில அரசுகள் விரும்பினால் ஒத்திவைத்துக்கொள்ளலாம் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டதற்குப் பிறகு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலிலே இந்தியாவிலே ஒரேயொரு மாநிலம் விவசாயிகளுக்கு வழங்கிய குறுகியகாலப் பயிர்க் கடனான சுமார் 2,598 கோடி ரூபாயை, இரண்டு ஆண்டு காலங்களுக்கு வசூல் செய்வது இல்லை என்றும், அதற்குப் பிறகு மூன்று ஆண்டு காலங்களுக்கு சம தவணைகளிலே வசூல் செய்துகொள்ளலாம் என்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கிற ஒரே மாநிலம் தமிழக அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலே இயங்குகிற, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிறந்த சீரிய வழிகாட்டுதலில் இயங்குகிற தமிழக அரசு என்பதை, இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.



அதுமட்டுமல்லாமல், நடப்பாண்டிலே விவசாயிகளுக்கு பயிர்க் கடனாக சுமார் 9 ஆயிரம் கோடி ரூபாய் வழங்க வேண்டுமென்று மாநிலத்திலே இருக்கிற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும், கூட்டுறவு வங்கியுமாக ஒன்றிணைந்து நடத்தப்பட்ட வங்கியாளர் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவின்படி, தமிழக அரசு கூட்டுறவுத் துறையின் மூலமாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிறந்த ஆணையின் பேரிலே 1,037 கோடி ரூபாய் பயிர்க் கடனை வழங்குவதாக ஒப்புக்கொண்டது. ஒப்புக்கொண்ட பயிர்க்கடன் தொகை அளவிலே இன்றைக்கு வரையிலே, சரியாகச் சொல்லப்போனால் 700 கோடி ரூபாய்க்கு மேலான தொகையை தமிழக அரசின் மூலம் நிர்வகிக்கப்படுகிற கூட்டுறவு வங்கிகளிலே மாநிலம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு பயிர்க் கடனாக வழங்கப்பட்டு இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்ற உண்மையையும் சொல்ல விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்தியாவினுடைய அனைத்து மாநிலங்களிலும் கூட்டுறவு வங்கிகளுடைய வட்டியைக் குறைக்க வேண்டுமென்ற திட்டத்தை நபார்டு வங்கி சிறப்பாக அறிவித்திருந்தாலும், இந்தியாவிலேயே விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்குகிற திட்டத்திலே, கூட்டுறவு வங்கிகளிலே வழங்குகிற விவசாயிகளுக்கான பயிர்க் கடனுக்கு 9 சதவிகிதமாக வட்டியைக் குறைத்திருக்கிற ஒரே அரசு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலே (மேசையைத் தட்டும் ஒலி) செயல்படுகிற தமிழக அரசு என்பதைக் கூறிக்கொள்கிறேன். தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்காக மாவட்ட வங்கியாளர்கள் கூட்டத்திலே எடுத்த—ஒட்டுமொத்த தஞ்சை மாவட்ட விவசாயிகளுடைய கடனுக்காக எவ்வளவு தொகை வழங்கப்பட வேண்டும் என்று தஞ்சை மாவட்டத்திலே நடைபெற்ற வங்கியாளர்கள் கூட்டத்திலே, அதாவது, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய 3 மாவட்ட விவசாயிகளுக்குமான தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக 3 மாவட்ட வங்கியாளர்களுடைய கூட்டத்தையும் ஒன்றாக ஒருங்கிணைத்து நடத்தியபோது எடுக்கப்பட்ட—முடிவின்படி கூட்டுறவு வங்கிகள் 53 கோடி ரூபாய் பயிர்க் கடனை வழங்க வேண்டுமென்று வங்கியாளர் கூட்டத்திலே முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் இன்றைய தேதி வரையிலே கூட்டுறவு வங்கிகள் வழங்கியிருக்கிற பயிர்க் கடனுடைய அளவு 57 கோடி ரூபாய்க்கு மேல் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, கடனே வழங்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம்பொதுவாகச் சொல்ல வேண்டாம் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2004 நவம்பர் 19

மேற்கு வங்காள மாநிலத்தில், கூட்டுறவு வங்கிகள் வட்டி விகிதத்தைக் குறைக்க வேண்டும் என்று சொன்னதற்குப் பிறகும், இன்றைக்கும் மேற்கு வங்காள மாநிலத்தில் பெறப்படுகிற வட்டி விகிதம் 10 சதவிகிதம் முதல் 10½ சதவிகிதம் வரை என்பதையும் இங்கே நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். வணக்கம்.

நண்பகல் 12-00

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு) இல்லை. இல்லை. இது சிறப்புக் கவன ஈர்ப்பு. திரு. வை. சிவபுண்ணியம் பேசட்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தினை அளித்திருக்கிறார்கள். கூட்டுறவுத் துறை மூலமாக வழங்கப்படும் கடன் அளவை அரசே நிர்ணயித்துக்கொள்கிறது. ஆனால் விவசாயிகளுக்குத் தேவையான அளவுக்கு கடன் வழங்கப்பட்டதா என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆகவே நாகை, திருவாரூர் மாவட்டப் பகுதிகளில் இன்றையதினம்கூட விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்படவில்லை என்ற பிரச்சினை இருந்துகொண்டே இருக்கிறது. (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். அதிலே குறிப்பாக, கூட்டுறவுத் துறையின் மூலமாக செயல்பட்டுக்கொண்டிருக்கிற கிராமக் கூட்டுறவு வங்கிகள் பலவற்றை, நலிவடைந்த வங்கிகள், செயல்பட முடியாத வங்கிகள் என்ற பெயர்ப் பட்டியலை இந்தச் சந்தர்ப்பத்திலே நீங்கள் வெளியிட்ட காரணத்தினாலே, அவற்றின்மூலமாகக் கடன் பெறமுடியாத ஒரு அவல நிலைக்கு விவசாயிகள் . . .

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவடைந்த வங்கிகளில் அங்கத்தினர்களாக இருக்கிற விவசாயிகளை அருகிலே இருக்கிற, நல்ல வலுவோடு இருக்கிற வங்கிகளில் கடன் பெற்றுக்கொள்ளத்தக்க அளவிற்கு, தக்க வகையிலே வழி காட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும், நலிவடைந்த வங்கிகளை சரி செய்வதற்கான, தகுதி ஆக்குவதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டு இருக்கின்றன என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு)



2004 நவம்பர் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்து விடட்டும். (குறுக்கீடு) திரு. வை. சிவபுண்ணியம் பேசட்டும். (குறுக்கீடு)

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் தருபவர்க்கு வலு இருக்கிறது என்றால் பெறுபவர்க்கு அந்த வலு இல்லையே. காரணம், அந்த நிபந்தனையற்ற கடன் வழங்காத காரணத்தினாலேதான் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் தருவதற்கான தகுதியை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கிறோம் என்று சொன்னால், பெறுவதற்காக விவசாயிகள் தயாராக இருக்கும்போது, ஒத்துக்கொள்ளப்பட்ட வகையிலே தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் விவசாயிகளுக்குக் கடனை வழங்க முன்வராத காரணத்தினால்தான், அந்த நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அதைச் செய்ய வேண்டியவர்கள், மத்தியிலே அரசுப் பொறுப்பிலே இருக்கிற நிதி இலாகாவை நிர்வகிப்பவர்கள் என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் பேசி முடித்து விடட்டும். பேசி முடித்து விடட்டும். நீங்கள் சொன்னதற்கு பதில் சொல்லிவிட்டார். அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார். திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு உதாரணம். என்னுடைய மன்னார்குடி தொகுதியிலே இருக்கிற லட்சுவாங்குடி கூட்டுறவு வங்கியில், நமது தமிழக அரசால் வெள்ள நிவாரணப் பணிகளைப் பார்வையிடுவதற்காக அனுப்பப்பட்ட வேளாண் துறை ஆணையரோடு சென்று நேரடியாக விசாரணை செய்ததில், 480 உறுப்பினர்களைக் கொண்டிருந்த அந்தக் கூட்டுறவு வங்கியில் 120 பேர்களுக்கு தகுதி இருப்பதாகச் சொல்லப்பட்டு, வெறும் 20 பேர்களுக்கு மட்டுமே கடன் வழங்கப்பட்டது. அந்த அதிகாரி விசாரணை செய்தபோது அங்கே இருந்தவர்கள் சொன்ன காரணம், மத்திய கூட்டுறவு வங்கி மூலமாக கடன் வழங்குவதை நிறுத்திவிட்டார்கள், ஆகவே மற்றவர்களுக்கு நாங்கள் வழங்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். வேளாண் துறை ஆணையர் அவர்கள் நேரடியாக விசாரணை செய்த தகவலை நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகள் கடன் வழங்குகிற திட்டத்தை இன்று வரையில் நிறுத்தவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய ஆணையின்படி இன்றும் வழங்கிக்கொண்டு இருக்கிறது; தொடர்ந்து வழங்கிக்கொண்டுதான் இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஆகவே அந்த மாவட்ட விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற பாதிப்புகளை கவனத்திலே கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடன் கொள்கைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். அதேபோல் ஏற்கெனவே பெற்று இருக்கிற கூட்டுறவுக் கடன், சுமையாகவே இருக்கிறது. அதை ஒத்திவைத்து இருக்கிறீர்கள். ஒத்திவைக்கப்படுகிறது என்று சொன்னாலே அது மேலும் சுமைக்கு ஆளாக்கப்படுகிற கொடுமைக்கு உள்ளாக்கப்படுவார்கள் அந்த விவசாயிகள். ஆகவே பாதிக்கப்பட்டிருக்கிற அந்த விவசாயிகளுடைய கடன் சுமையைப் போக்க வேண்டுமானால், அந்தக் கடன் சுமையில் இருக்கிற விவசாயிகளுடைய கடன்கள் அனைத்தையுமே தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர்களுக்குக் கொடுத்து இருக்கிற கூட்டுறவுக் கடனுடைய பெரும் பகுதி நபார்டு வங்கி கொடுத்து இருக்கிற பணம். அந்தக் கடனை இரத்து செய்ய வேண்டுமென்று மைய அரசை நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மக்களுடைய வாக்குகளைப் பெற்று நீங்களும் டெல்லியிலே ஆட்சி செய்கிற காரணத்தினால் நபார்டு வங்கி மூலம் கூட்டுறவுக் கடனை இரத்து செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி கூட்டுறவுக் கடனை மைய அரசு இரத்து செய்ய, நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசை வலியுறுத்துவதிலே எனக்கு மாற்றுக் கருத்தே இல்லை. மைய அரசையும் நாங்கள் வலியுறுத்துகிறோம்; வலியுறுத்துவோம். அதற்கான போராட்டங்களையும் நடத்துகிற இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில், மாநில அரசு இதற்கான உதவிகளைச் செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, இந்த இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டிருக்கிற குடிசை வீடுகள் இப்போது



வரிசையாக இடிந்துகொண்டே இருக்கின்றன. ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே நிவாரணப் பணிகள் நடைபெற்ற . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் பிரச்சினைகளுக்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கட்சி, போராட்டங்கள் நடத்திக்கொண்டு இருப்பதாக இங்கே தெரிவித்தார். வெறும் வெத்து வேட்டுப் போராட்டங்கள் நடத்துவதால் விவசாயிகளுக்கு என்ன பலன்? (மேசையைத் தட்டும் ஒலி) அதை விட அவர்கள் சொன்னால்-வற்புறுத்தினால்-மத்திய அரசு இன்று பணிய வேண்டிய நிலைமையில் இருக்கிறது. ஆகவே இந்த விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்யச் சொல்லி மத்திய நிதி அமைச்சரை, உங்கள் கட்சித் தலைவர்கள் வற்புறுத்த வேண்டுமென்று நீங்கள் அங்கே சென்று வலியுறுத்த வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-05

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்வதை எங்களுடைய கட்சி வலுவாகச் செய்துகொண்டிருக்கிறது. மீண்டும் வலுவாக வலியுறுத்துவோம். மத்திய அரசையும், மத்திய நிதி அமைச்சரையும் நாங்கள் வலியுறுத்தித்தான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அந்தக் கொள்கை தவறு என்பதையும் நான் சொல்கிறேன். இந்த அவையிலும் சொல்கிறேன். ஆகவே விவசாயிகளைப் பாதுகாக்காமல், தொழிலாளர்களைப் பாதுகாக்காமல் இருக்கமுடியாது....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்திலே நின்றுகொண்டு, வலியுறுத்துகிறோம் என்று சொன்னால் போதாது. சும்மா கொடியைத் தூக்கிப் பிடித்தால் போதாது. மத்திய நிதி அமைச்சரை, அறிவிப்பை வெளியிடச் செய்யுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசை அறிவிப்பு வெளியிடச் செய்வதற்கான வாய்ப்பைக் கண்டிப்பாக ஏற்படுத்த முடியும். ஆனால் உங்களுக்கும் அதிலே பங்கு இருக்கிறது என்பதை மறந்துவிட வேண்டாம் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகள் எல்லோருக்கும் பொதுவானவர்கள். இதிலே அரசியல் பாகுபாடுகளே இல்லாத வகையிலே

பார்க்க வேண்டும் என்பது என்னுடைய அன்பான வேண்டுகோள். ஆகவே இதிலே பாதிக்கப்பட்டிருக்கிற அந்தக் குடிசை வீடுகள் இப்போதும் பாதித்துக் கொண்டே இருக்கின்றன. மழை நின்ற உடனே, காய்ந்து வருகின்றபொழுதுதான் குடிசை வீடுகள் இடிகிற தொடக்க நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் கடந்த வாரத்திற்கு முன்னதாகவே பணிகள் முடிந்து விட்டதாக, நிவாரணம் கொடுத்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. மீண்டும் கணக்கெடுப்புச் செய்து, இடிந்து விழுந்துகொண்டிருக்கிற குடிசை வீடுகளுக்கு குறைந்தபட்சம் பகுதியாக பாதித்த வீடுகளுக்கு 2,000 ரூபாய் அளவிற்கு அளிக்க வேண்டும். முழுமையாகப் பாதித்திருக்கிற குடிசை வீடுகளுக்கு குறைந்தபட்சம் 5,000 ரூபாயாவது வழங்கினால்தான் அந்தக் குடிசை வீடுகளைப் புதுப்பிக்க இயலும். இன்னொரு வகையில் குடி வீடுகள் என்பது 1986-87 ஆம் ஆண்டுகளிலே கட்டப்பட்ட ஓட்டு வீடுகள், மிகப் பெரிய அளவுக்குச் சேதமடைந்து விட்டன. ஆகவே அவற்றை கான்கிரீட் வீடுகளாக மாற்றுவதற்கான முயற்சியில் அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டுமென நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 8 ஆயிரம் ரூபாய் கொடுத்தால்தான் இந்த ஆண்டு அவர்களை விவசாய பாதிப்பிலிருந்து மீளச் செய்ய முடியும். ஆகவே பாதித்திருக்கிற விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். இப்போது வெள்ளத்தால் பாதித்திருக்கிற பயிர்களில், ஓரளவுக்கு பிழைக்கும் என்ற நம்பிக்கை அளிக்கக்கூடிய பயிர்களுக்கு அரசு உடனடியாக உரம், பூச்சி மருந்து இவற்றை இலவசமாக வழங்க வேண்டும். ஏனென்றால் அந்த விவசாயிகள் அந்தப் பயிர்களைக் காப்பாற்ற முடியாத இக்கட்டான நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு இலவசமாக உரம், பூச்சி மருந்தை வழங்குவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கூடுதலாக இந்த வெள்ள பாதிப்பிற்குரிய காரணங்கள் என்ற முறையில், தூர் வாருகிற பணிகள் எல்லா வகையிலும் சிறப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக, வடிகால்கள் தூர் வாரப்படாமல் இருக்கின்ற காரணத்தினாலே, இப்படிப்பட்ட வெள்ள பாதிப்பு, உடைப்பு ஏற்படுகிற அபாயம் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. தனிக் கவனம் செலுத்தி அதைச் செய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். இதைவிட, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் மிகப் பெரிய பாதிப்பிற்குரிய காரணங்களில் ஒன்று இறால் பண்ணைகள்.



இந்த இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டதன் விளைவாலே எங்களுடைய திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களினுடைய வடிகால்கள் அத்தனையும் தூர்ந்து போய் அடைக்கப்பட்டு, இந்த வெள்ள அபாயம் தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. ஆகவே காவிரி டெல்டா பாசனப் பகுதி மாவட்டங்களிலே அமைக்கப்பட்டிருக்கின்ற இறால் பண்ணைகளை நீக்க வேண்டும். அதேபோல, அதை நீக்குவதில் இருக்கக்கூடிய தடைகளை அகற்றுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். சென்ற ஆண்டு இந்த அவையிலே நான் பேசியபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிலே கவனம் செலுத்தி ஒரு முயற்சியை மேற்கொண்டார்கள். ஆனால் அது முற்றுப் பெறாமலே இருக்கிறது. ஆகவே தொடர்ந்து நடவடிக்கை எடுத்து, அப்படிப்பட்ட தடைகளை அகற்றுவதற்கான முயற்சிகளையும் சேர்த்து எடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உயிரிழந்திருக்கிறவர்களுடைய குடும்பங்களுக்கு நிதி உதவி என்பது போதுமானதாக இல்லை. என்னுடைய தொகுதியிலேயே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர்கள், சுவர் இடிந்து விழுந்து மரணமுற்றார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உடனடியாகத் தகவல் அனுப்பி, அதற்குரிய நிவாரணமும் வந்திருக்கிறது என்று சொன்னாலும், அது போதுமானதாக இல்லை. விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களாக, ஏழைகளாக இருக்கக்கூடிய அந்த மக்களுக்கு இந்த நிவாரண உதவி போதாது என்ற காரணத்தினாலே அதனுடைய தொகையை அதிகரிப்பதற்கான முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கிறேன். குறிப்பாக எங்களது மாவட்டம் தொடர்ந்து பாதித்துக்கொண்டே இருக்கிறது. ஒரு தடவை வெள்ளம் பாதிக்கிறது. மறு தடவை வறட்சி பாதிக்கிறது. இன்னொரு தடவை புயல் காற்று பாதிக்கிறது. ஆகவே இயற்கைச் சீற்றத்திற்கு உள்ளாகிக்கொண்டே இருக்கிற காரணத்தினாலே, இயற்கையை நம்பிய தொழில் என்ற காரணத்தினாலே, விவசாயத்தை பாதுகாக்கக்கூடிய, விவசாயிகளை பாதுகாக்கக்கூடிய வகையிலே, தனி ஒரு திட்டத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இயற்கைச் சீற்ற நிதி என்பதை... *(மணியடிக்கப் பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நான் ஒரே வரியில் பேச்சை முடித்துவிடுகிறேன். இயற்கை இடர்பாட்டு நிதி என்ற ஒன்றை தனியாகத் தொடங்க வேண்டும். வெள்ளம், வறட்சி, புயல் என்பதற்காக ஒரு தனி நிதியத்தை ஏற்படுத்துவதற்கு மாநில அரசு முயற்சி எடுப்பதோடு, கூடுதலான நிதியை அதிலே போடுவதற்கான நடவடிக்கையும் எடுத்தால் இப்படிப்பட்ட காலங்களிலே உதவி செய்வதற்கான முயற்சியை எடுக்க முடியும். ஆகவே இந்த வெள்ள நிவாரணப் பணிகளைப் போர்க்கால அடிப்படையிலே தொடங்க வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, .....

**திரு. வி.கே. லட்சுமணன்:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன திரு. வி.கே. லட்சுமணன், என்ன சொல்லுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விவசாயிகள் இரண்டு விதமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. கவன ஈர்ப்பு முடியட்டும். தனியாக வைத்துக்கொள்ளலாம். திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல மழைக் காலத்திலே, வெள்ளம் சூழ்ந்த நேரத்திலே, மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள் எங்கள் மாவட்டத்தின் வழியாக சுற்றுப்பயணம் செய்து மயிலாடுதுறைக்கு வந்திருந்தார்கள். எல்லா விவசாயிகளும் ஆவலோடு எதிர்பார்த்தார்கள். நிதி அமைச்சர் வந்திருக்கிறார், ஏதாவது நிவாரணத் தொகை அறிவிப்பார் என்று எதிர்பார்த்தார்கள். டீசல் விலை உயர்வை நியாயப்படுத்தினாரே தவிர, ஒரு வார்த்தையைக்கூட விவசாயிகளுக்கு ஆதரவாக, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஆதரவாக, மத்திய நிதி அமைச்சர் வாய் திறக்கவில்லை என்பதை நான் இந்த அவையிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



எங்கள் பகுதி, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம் முழுவதையும் வெள்ளம் சூழ்ந்த மாவட்டமாக இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவித்து, மத்திய அரசு கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும். அதற்கு இந்த அவையிலே உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மத்தியில் ஆளும் கட்சி வரிசையிலே அமர்ந்திருக்கிற அத்தனை அமைச்சர்களையும் வற்புறுத்த வேண்டும் என்று காவிரி டெல்டா விவசாயி என்ற முறையிலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, கடந்த 20 ஆண்டு காலமாக, இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வெள்ளம் சூழ்கிற சூழ்நிலை வருகிறபோது எல்லாம், எங்கள் தொகுதியிலே நான்கு ஆறுகள்—வடிகால் ஆறுகள்—ஐயவையனாறு, பழவாறு, வெட்டாறு மற்றும் வகிமலையாறு என்று நான்கு ஆறுகள்—தூர் எடுக்கப்படாமல் வழிந்து உடைப்பெடுத்து எனது தொகுதியே பாதிக்கப்பட்டது மட்டுமல்லாமல், அருகிலுள்ள குத்தாலம் தொகுதி, பூம்புகார் சட்டமன்றத் தொகுதி, சீர்காழி சட்டமன்றத் தொகுதி ஆகிய நான்கு தொகுதிகளிலும் இந்த ஆறுகளால் நாங்கள் பாதிக்கப்படுகிறோம். இந்த வெள்ளச் சீற்றத்தைப் பார்வையிட வந்திருக்கிற Thiru Jagmohan Singh Raju அவர்கள்கூட, இந்த ஆற்றினுடைய சீற்றத்தை எல்லாம் பார்த்து, நிரந்தர வடிகால் மட்டுமே இதற்குச் சரியான தீர்வு என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே போர்க்கால அடிப்படையிலே இதற்கான தனி team அமைத்து, இந்த பழவாறு, வெட்டாறு, ஐயவையனாறு—தனி team set பண்ணி இதையே ஒரு பாடமாக எடுத்துக்கொண்டு இந்த அரசு—ஆகியவற்றைத் தூர் எடுக்க வேண்டும், கரைகளை உயர்த்தி ஆழப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல எனது தொகுதியிலே மட்டும் ஏறக்குறைய 10 ஆயிரம் வீடுகள் வெள்ளம் சூழ்ந்த வீடுகளாக இருந்தன. நமது அரசு நிவாரணத் தொகை கொடுத்தால்கூட இடிந்த வீடுகளுக்கு மட்டும் கொடுக்காமல், குறைவாக இருந்தாலும்கூட தலைக்கு 500 ரூபாயாவது வெள்ளம் புகுந்த வீடுகளுக்கு, குடிசைப் பகுதிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு தமிழக முதல்வரை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல கடந்த 20 ஆண்டுகாலமாக கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள், சிமெண்ட் வீடுகள் அத்தனையுமே இந்த 35 நாள் தொடர் மழையால் மிகுந்த பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. அச்சத்தோடு உள்ளே குடியிருக்கின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. தொகுப்பு வீடுகளை

பராமரிப்பு செய்வதற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கொடுப்பதற்கு வகையில்லாமல் இருக்கிறது. அதைப்போல உள்ளாட்சி மன்ற அமைப்புகள்கூட அவற்றை சீர்படுத்துவதற்கும் மராமத்து செய்வதற்கும் நிதி ஒதுக்க முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால், பாதிக்கப்பட்ட தொகுப்பு வீடுகளுக்கு, சிமெண்ட் வீடுகளுக்கு அரசு நிதி ஒதுக்கி, பராமரிப்பு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல எனது தொகுதியிலே சாலைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மணல்மேட்டிலிருந்து வைத்தீஸ்வரன்கோயில் வரை செல்கின்ற சாலை, மயிலாடுதுறையிலிருந்து ஆனதாண்டவபுரம் வழியாக சேத்தூர் வரை செல்கின்ற சாலை, புலவூர் சித்தமல்லி சாலை என்பது கிராமத்து சாலை, கிராமப் பகுதியைச் சார்ந்த நெடுஞ்சாலைத் துறை சாலை. இவை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தமிழக அரசு இதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பயிர் இன்சூரன்ஸ் பற்றி ஒவ்வொரு முறையும் பேசப்படுகிறது. இந்த ஆண்டு எங்கள் டெல்டா விவசாயிகள் எந்த வகையிலே இன்சூரன்ஸ் தொகை பெறுவார்கள் என்ற குழப்பம் இருக்கிறது. அதைப்பற்றி தெளிவான ஒரு முடிவை நமது அரசு எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏறத்தாழ எனது தொகுதியிலே மட்டும் 18 ஆயிரம் ஏக்கர் சம்பா பயிர், 25 ஆயிரம் ஏக்கர் தாளடிப் பயிர் முழுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. ஏக்கருக்கு ஐயாயிரம் ரூபாயாவது நிவாரண நிதியாக தமிழக அரசு ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல புதுக்கோட்டை மாவட்டத்திலே கல்லணைக் கால்வாய் பாசன விவசாயிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனது தொகுதியிலேகூட இந்த வெள்ளப் பாதிப்பால் நிறைய உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 50 ஆயிரம் ரூபாய் அறிவித்திருக்கிறார்கள். அதை கூடுதலாகக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே மயிலாடுதுறை நகரத்தையொட்டி பழங்காவேரி என்கிற ஒரு ஆறு எங்கள் பகுதியிலே செல்கிறது. இது மோசமாக ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது, நகரத்தின் உள்ளே செல்கின்ற, நகரத்தின் ஊடாகச் செல்கின்ற இந்த ஆற்றின் மூலமாகத்தான்



நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் 52 குளங்களுக்கு நன்னீர் நிரப்ப வேண்டிய சூழ்நிலையும் இருக்கிறது. 35 நாட்கள் மழை பெய்திருக்கிறது. பழங்காவேரியிலே ஆக்கிரமிப்பு இருக்கின்ற காரணத்தாலும், அது பாசனத்திற்குப் பயன்படாத சூழ்நிலையை உண்டாக்கிவிட்டதாலும் நகரத்திலுள்ள 27 குளங்களில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட இல்லாத அளவிற்கு இன்றைக்கு மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. நேரடியாகத் தண்ணீர் செல்லவில்லை. 35 நாட்கள் மழை பெய்தும்கூட நகரத்திலுள்ள 27 குளங்கள் நிரம்பாமல் வறண்டு இருக்கின்றன என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதைப்போல விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்குவதோடு இந்த இன்சூரன்ஸ் திட்டத்தைப் பற்றி ஒரு தெளிவான முடிவெடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறைந்தபட்சமாக நில வள வங்கி மூலமாகவும், கூட்டுறவு வங்கி மூலமாகவும் பட்ட கடனுக்கான வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும். வாய்ப்பிருந்தால் கடனையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த அளவிற்குப் பேச வாய்ப்பளித்த அவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக தமிழகத்திலே பெய்த கடுமழையின் காரணமாக பல்வேறு மாவட்டங்கள் வெள்ளச் சேதத்திற்கு ஆட்படுத்தப்பட்டு விவசாயிகள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள் என்கின்ற நிலையில் இன்றைக்குத் தமிழக அரசு காவிரி டெல்டா மாவட்டங்களிலே வெள்ளத்தால் சேதம் ஏற்பட்ட நிலையில், உடனடியாக முதல் நிவாரணமாக 5 கோடி ரூபாயை வழங்கி இருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்களே இங்கு குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த 5 கோடி ரூபாயோடு இந்த அரசு நின்று விடாது. மீண்டும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குப் பல்வேறு நலத் திட்டங்களைச் செய்வதற்காக, அவர்கள் விவசாயப் பணிகளை மீண்டும் தொடருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்கின்ற உறுதியையும் இந்த அவையிலே அளித்திருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த 3 ஆண்டுகளாக தமிழகம் மிகப் பெரிய வறட்சியினுடைய தாக்கத்திற்கு ஆளாக்கப்பட்டு, அதிலிருந்து மீளுவதற்குள்ளாகவே இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டது. இன்றைக்கு மத்திய அரசிலிருந்து தமிழகத்தினுடைய வறட்சியைப் போக்குவதற்காக நிதி ஒதுக்க வேண்டும் என்று சொல்லி மாநில அரசு ஏற்கெனவே ரூ. 1,400 கோடிகளுக்கு மேலாக தேவை என்ற கோரிக்கை வைத்து இருந்தது. மத்திய அரசின் சார்பிலே பல குழுக்களும் வந்து தமிழகத்திலே இருந்த வறட்சியினைப் பார்த்துச் சென்றார்கள். அதன் மூலமாக மாநில அரசுக்கு மத்திய அரசு எவ்வளவு உதவி வழங்கியிருக்கிறது என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே அறிந்துகொள்வதற்கு விரும்புகின்றேன். அப்படி அவர்கள் வழங்கிய தொகை எவ்வளவு என்பதை அறிந்தால்தான், இன்றைக்கு தமிழக அரசு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளுக்கு மாநில அரசு எந்த அளவுக்கு உதவிக்கரம் நீட்டுகிறது என்பதை தமிழக மக்கள் புரிந்துகொள்வார்கள் என்கின்ற நிலையில், அதைத் தெளிவுபடுத்த வேண்டும். இன்றைக்கு இந்த வெள்ளத்தின் தாக்கத்தால் ஏற்பட்டிருக்கிற நிலைமைகளைப் போக்குவதற்கு, மத்திய அரசிடமிருந்து 400 கோடி ரூபாய்க்கு மேலாக தேவை என்பதை முதலமைச்சர் அவர்கள் வெள்ளம் பாதித்த நிலையை அறிந்த அன்றே, பிரதமர் அவர்களுக்குக் கடிதத்தின் மூலமாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதைப் பெற்றுத் தருவதற்கு மத்திய அரசிலே பங்கு வகிக்கின்ற நமது அனைத்துக் கட்சிகளும் உறுதுணையாக இருக்கவேண்டும்.

இங்கு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இன்றைக்கு இடதுசாரிக் கட்சிகள் எல்லாம் மத்திய அரசினுடைய நிலையை நிர்ணயிக்கின்ற ஒரு எல்லையிலே அவர்களுடைய பங்கு இருக்கிறது. அவர்களுடைய ஆதரவு இல்லை என்று சொன்னால், மத்திய அரசு மத்தியிலே நிலையான ஒரு அரசாக இருக்க முடியாது என்கின்ற சூழல் இருக்கின்ற காரணத்தினால், நானும்கூட அந்த இடதுசாரி இயக்கத்திலே பங்கு வகிக்கின்றவன் என்கின்ற முறையில் எங்களுடைய இயக்கத்தைச் சார்ந்தவர்களைக்கூட தூண்டுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன். மத்திய அரசு உரிய நிவாரணத்தை தமிழகத்திற்குத் தரவேண்டும் என்கின்ற நிலையை எடுத்துச் சொல்வதற்கு (குறுக்கீடு) வேண்டாம் என்று சொல்வதைக் காட்டிலும் நாங்கள் நிச்சயமாக அதைச் செய்வதற்குக் கடமைப்பட்டவர்கள் என்கின்ற முறையில் அதை எங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் எடுத்துக் கூறுவார்கள்.



பிற்பகல் 12-20

இன்றைக்கு இந்த விவசாயப் பணிகளையெல்லாம், டெல்டா மாவட்டங்களில் மட்டுமல்ல, சற்று மழை பெய்து இருக்கின்ற காரணத்தினால்,, தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து மாவட்டங்களிலும் துவங்க வேண்டும். விவசாயிகள் தங்களுடைய பணியில் ஈடுபட வேண்டும் என்கின்ற நிலையில் இருக்கின்ற நேரத்தில், கடந்த மூன்று ஆண்டு கால வறட்சியிலே அவர்கள் பாதிக்கப்பட்டதன் காரணமாக, அந்தப் பணிகளுக்கு தங்களிடத்திலே போதிய நிதி ஆதாரம் இல்லாது மிகுந்த சிரமத்திலே இருந்துகொண்டிருக்கின்றார்கள். பழைய கடன்கள் நிலுவையில் இருந்தாலும்கூட அவற்றை நீண்டகாலக் கடன்களாக மாற்றிவிட்டு, புதிதாக விவசாயப் பணிகளைத் தொடங்குவதற்கு விவசாயிகளுக்கு கடன் வழங்க வேண்டும் என்கின்ற ஒரு நிலையை இன்றைக்கு அரசு எடுத்திருந்தாலும்கூட, இங்கு அமைச்சர் அவர்கள் எல்லா கூட்டுறவு வங்கிகளிலும் கடன் வழங்கப்படுகின்றது என்று சொன்னாலும்கூட, அது சற்றுத் தொய்வாகத்தான் இருக்கின்றது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் மாநில அரசு மத்திய அரசிடம் இருந்து வறட்சி நிவாரணப் பணிகளுக்காக எவ்வளவு உதவி கேட்டது, மத்திய அரசு எவ்வளவு உதவி வழங்கியிருக்கிறது, நம் தேவைக்கு ஏற்ப அதற்குரிய உதவியை மத்திய அரசு வழங்கியதா என்றும் கேட்டார். மத்திய அரசிடமிருந்து மாநில அரசு கேட்டதோ 1,680 கோடி ரூபாய். ஆனால் மத்திய அரசு வழங்கியதோ 156.84 கோடி ரூபாய். அவ்வளவுதான். அதைப்போலவே, 5.4 இலட்சம் டன் அரிசி வேண்டுமென்று கேட்டிருந்தோம். ஆனால் மத்திய அரசு வழங்கியுள்ளதோ 1.5 இலட்சம் டன் அரிசிதான்.

**திரு. லா. சந்தானம்:** முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இதை இங்குள்ள அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைக் கேட்டேன். ஏறக்குறைய அந்த உதவி 10-ல் ஒரு பங்குகூட மத்திய அரசிலிருந்து வரவில்லை என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்கின்ற அவசியம் இன்றைக்கு இருக்கின்ற நிலையிலே, அதை நாம் அறிந்து இருக்கிறோம், தெரிந்து இருக்கிறோம். அதற்காக நான் முதலமைச்சருக்கு பாராட்டுகளைத் தெரிவிக்கிறேன்.

கிராமப்புறங்களிலே இன்றைக்கு கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கப்படுகின்ற கடன்கள் சற்று தொய்வான நிலையிலே இருக்கின்றன.

அதை அரசு துரிதப்படுத்த வேண்டும். இன்றைக்கு விவசாயிகள் அக்கறையோடு மிக வேகமாக தங்களுடைய பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நினைக்கின்ற நேரத்தில், சற்று காலதாமதம் ஆகின்ற ஒரு சூழல் இருக்கிறது. அதனால் உடனடியாக அவர்களுக்கு அந்தக் கடன்கள் வழங்குகின்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்ற சாலைகளும் செப்பனிடப்பட வேண்டும். அவர்கள் சொன்னதுபோல வரத்துக் கால்வாய்களும், தூர் வாரப்பட வேண்டும் என்கின்ற அவசியம் இன்றைக்கு எழுந்திருக்கிறது. அதன் மூலமாக இன்றைக்கு பல்வேறு கிராமங்கள் வரத்துக் கால்வாய்கள் தூர் வாரப்படாத நிலையில் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். கூட்டுறவு வங்கிகள் மூலமாக கடன்கள் வழங்குகின்ற நிலையை துரிதப்படுத்துவதோடு, பாதிக்கப்பட்ட சாலைகளையும், தூர் வாருகின்ற வரத்துக் கால்வாய்களையும் உடனடியாகச் செப்பனிட வேண்டிய அவசியத்தையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் நிவாரணப் பணியை துரிதமாகச் செய்வதற்கு அரசு முற்பட வேண்டும் என்று சொல்லி அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட கிழக்குப் பருவ மழை தமிழகத்தில் 18-10-2004 அன்று தொடங்கியது. இப்பருவ மழைக் காலத்தில் அக்டோபர் திங்கள் முதல் டிசம்பர் திங்கள் வரை 468.46 மில்லி மீட்டர் அளவு இயல்பான மழை பெய்ய வேண்டும். இம்மழை அளவு தமிழகத்தில் ஆண்டு முழுவதும் பெறப்படும் மொத்த மழை அளவில் 48 சதவீதம் ஆகும். வழக்கமாக அக்டோபர் மாதத்தில் 187.65 மில்லி மீட்டர் அளவு இயல்பான மழை பெய்ய வேண்டும். ஆனால் நடப்பு ஆண்டு அக்டோபர் மாதத்தில் 278.49 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

பிற்பகல் 12-25

இந்த ஆண்டு அக்டோபர் மாதம் பெய்த மழை, கடந்த ஆண்டுகளில் அக்டோபர் மாதத்தில் பெய்த மழையைக் காட்டிலும் மிகவும் அதிகமான



அளவாகும். இந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழைக் காலத்தின் தொடக்கத்தில் தமிழ்நாட்டின் கடலோரப் பகுதியில் ஒரு காற்றழுத்தத் தாழ்வு மண்டலமும், அதைத் தொடர்ந்து 28-10-2004 அன்று தமிழ்நாடு-இலங்கைக் கடற்கரையையொட்டி தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு வளைகுடாவில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் ஒன்றும் உருவானது. நவம்பர் ஒன்றாம் தேதி வரை நீடித்த இந்தக் காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தினால் கடலோர மாவட்டங்களான நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், கடலூர், விழுப்புரம் மற்றும் சென்னையில் மிக கன மழை பெய்துள்ளது. 28-10-2004 அன்று வங்கக் கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டல நிலை காரணமாக 28-10-2004 முதல் 31-10-2004 வரை நாகப்பட்டினம் மாவட்டத்தில் 485.47 மில்லி மீட்டர் மழையும், திருவாரூர் மாவட்டத்தில் 310.22 மில்லி மீட்டர் மழையும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 211.19 மில்லி மீட்டர் மழையும், கடலூர் மாவட்டத்தில் 320.09 மில்லி மீட்டர் மழையும், விழுப்புரம் மாவட்டத்தில் 237.05 மில்லி மீட்டர் மழையும் பெய்துள்ளது. சென்னை நகரில் 140.61 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. இவ்வருடம் காவிரி டெல்டா மாவட்டங்களில் சராசரி மழை அளவினைக் காட்டிலும் இரண்டு முதல் மூன்று மடங்கு மழை, 10 நாட்களுக்குள் பெய்துள்ளது. குறிப்பிடும்படியாக, அக்டோபர் 29 ஆம் தேதி அன்று திருப்பூண்டியில் 408 மில்லி மீட்டர் மழையும், நாகப்பட்டினத்தில் 312 மில்லி மீட்டர் மழையும் பெய்துள்ளது. இவ்வளவு அதிக மழை ஒரே நாளில் பெய்ததினால் எல்லா ஆறுகளிலும், வடிகால்களிலும் மழைநீர் வடிந்து கடைமடை regulator-களில் அதனுடைய கொள்ளளவைவிட கூடுதலாக இரண்டு முதல் மூன்று மடங்கு வரை அதிக நீர் வெளியேறியுள்ளது. உதாரணமாக, வினாடிக்கு 1,882 கன அடி மட்டுமே வெளியேறக்கூடிய காவிரி மேலையூர் கடைமடை regulator-ல் நவம்பர் ஒன்றாம் தேதி மட்டும் 2,970 கன அடி நீர் வெளியேறியது. வினாடிக்கு 1,188 கன அடி மட்டும் வெளியேறக்கூடிய மஞ்சள் ஆறு, கண்ணப்பன்பேட்டை கடைமடை regulator-ல் 3,087 கன அடி நீர் வெளியேறியுள்ளது. வினாடிக்கு 1,120 கன அடி மட்டுமே வெளியேறக்கூடிய மகிமலையாறு, கண்ணப்பன்பேட்டை கடைமடை regulator-ல் 2,683 கன அடி நீர் வெளியேறியுள்ளது. வினாடிக்கு 5,123 கன அடி மட்டுமே வெளியேறக்கூடிய வெட்டாறு கடைமடை regulator-ல் 6,100 கன அடி நீர் வெளியேறியுள்ளது. வினாடிக்கு 720 கன அடி மட்டுமே வெளியேறக்கூடிய கடுவையாறு வடிவச்சேரி கடைமடை regulator-ல் 1,220 கன அடி நீர் வெளியேறியுள்ளது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2004 நவம்பர் 19

பொதுவாகவே, வங்காள விரிகுடாவில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் ஏற்படும்போது கடலில் high tide எனப்படும் காரணங்களினால் சாதாரண மட்டத்தைவிட மேலும் 1 1/2 மீட்டர் முதல் 2 மீட்டர் அளவிற்கு, சுமார் 6 அடி கடல்நீர் மட்டம் உயரும் நிலை ஏற்படுகிறது. இதனால், குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் விலகிப் போகும் வரை தண்ணீர் வடிவது இயலாத காரியமாகவே இருக்கிறது. இதற்கிடையே பெருமழை பெய்யும்போது அளவுக்கு அதிகமாக தண்ணீர் தேங்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. நாட்டிலுள்ள எல்லா டெல்டா பகுதிகளிலேயும் இந்தப் பிரச்சினை தொடர்ந்து இருந்துகொண்டேதான் இருக்கிறது. இந்த முறை ஏற்பட்டதுபோல் தொடர்ந்து பல நாட்களாக மழை பெய்யும்போது ஏற்படும் சேதத்திற்கு அதிகபட்ச மழைநீர் தேங்கியதும் மற்றும் கடல்நீர் மட்டம் உயர்ந்திருப்பதும்தான் முக்கிய காரணங்களாகின்றன. இந்த கன மழையினால் நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், கடலூர், விழுப்புரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஆங்காங்கே வெள்ளம் ஏற்பட்டு குடிசைகள், சாலைகள், இணைப்புச் சாலைகள் போன்றவை கடுமையான சேதத்திற்கு உள்ளாயின. மேலும், இம்மாவட்டங்களில், பெரும்பாலான பகுதிகளில் நெற் பயிர்கள் நீரில் மூழ்கின. உடனடியாக வெள்ள நிலைமையை 1-11-2004 அன்று ஆய்வு செய்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக ரூபாய் 5 கோடியை வழங்கி, நிவாரணப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு ஆணையிட்டார்கள். மேலும், இரண்டு அலுவலர் குழுக்களை அமைத்து, பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்குச் சென்று அம்மாவட்டங்களில் பயிர்கள், கால்வாய்கள், சாலைகள், கட்டடங்கள் ஆகியவற்றிற்கு ஏற்பட்டுள்ள சேதத்தைப்பற்றி ஓர் அறிக்கை அளிக்குமாறு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் டாக்டர் ஆர். விஜயகுமார் அவர்களைத் தலைவராகக் கொண்ட முதல் குழு, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களிலும், வேளாண்மைத் துறை ஆணையர் திரு. ஜக்மோகன் சிங் ராஜூ அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களிலும் சுற்றுப்பயணம் செய்து சேத விவரங்களைப் பற்றிய அறிக்கையை 8-11-2004 அன்று அரசுக்கு அளித்தது. அலுவலர் குழுக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அளித்த அறிக்கையின்படி மாவட்ட வாரியாக ஏற்பட்ட சேதம் பின்வருமாறு:



2004 நவம்பர் 19] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பிற்பகல் 12-30

**நாகப்பட்டினம்:** நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. 381 வருவாய் கிராமங்களும், 276 ஊராட்சிகளும், 8 தனி ஊராட்சிகளும், 4 நகராட்சிகளும் பாதிக்கப்பட்டன. இம்மாவட்டத்தில் 7.62 இலட்சம் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டனர். 1,969 குடிசைகள் முழுமையாகவும், 13,048 குடிசைகள் பகுதியாகவும் சேதமடைந்தன. 8 நபர்கள் உயிரிழந்துள்ளார்கள். 17 கால்நடை இனங்கள் வெள்ளத்திற்குப் பலியாகின. வெள்ளத்தால் சூழப்பட்ட ஏறத்தாழ 3.5 இலட்சம் மக்கள் பாதுகாப்பான பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தேவையான உணவுப் பொட்டலங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூபாய் 43.56 இலட்சம் நிதியுதவியும், 19,690 கிலோ அரிசியும், 3,938 லிட்டர் மண்ணெண்ணெயும் நிவாரணமாக வழங்கப்பட்டன. 66,758 ஹெக்டேர் நெற்பயிர் முழுவதுமாக சேதமடைந்துள்ளதாகவும், 27,816 ஹெக்டேர் 50 சதவிகிதத்திற்கு மேல் சேதமடைந்துள்ளதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். 586.42 கிலோமீட்டர் நீளத்திற்கு நெடுஞ்சாலைகளும், 36.48 கிலோமீட்டர் நீளத்திற்கு நகராட்சி சாலைகளும், 633.35 கிலோமீட்டர் நீளத்திற்கு ஊராட்சி சாலைகளும், 22.10 கிலோமீட்டர் நீளத்திற்கு சிறப்பு ஊராட்சி சாலைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், நெடுஞ்சாலைகளிலுள்ள 29 பாலங்கள் மற்றும் 100 பொதுக் கட்டடங்கள் சேதமடைந்துள்ளதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்துள்ளார்.

**திருவாரூர்:** திருவாரூர் மாவட்டத்தில் 5 வட்டங்களிலுள்ள 132 வருவாய் கிராமங்களும், 132 ஊராட்சிகளும், 2 நகராட்சிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. 1,65,000 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 13 ஆயிரம் குடிசைகள் தண்ணீரால் சூழப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 9 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். 279 குடிசைகள் முழுமையாகவும், 2,281 குடிசைகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளன. 9 நபர்கள் கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக உயிரிழந்துள்ளனர். 16 கால்நடை இனங்கள் வெள்ளத்தால் பலியாகியுள்ளன. தேவையான உணவுப் பொட்டலங்களும் வழங்கப்பட்டுள்ளன. 7.32 இலட்சம் ரூபாய் நிதி உதவியும், 3,400 கிலோ அரிசியும் வழங்கப்பட்டுள்ளன. முழுவதுமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக வேட்டி, சேலைகளும் வழங்கப்பட்டுள்ளன.

நெற் பயிர்களுக்கு மிகவும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் 30,510 ஹெக்டேர் பரப்பளவில் நெற் பயிர்கள் முழுமையாகவும், 13,947 ஹெக்டேரில் 50 சதவிகிதத்திற்கு மேலும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. கால்வாய்கள் மற்றும் ஆற்றின் கரைகளில் 70 இடங்களிலும் மற்றும் 148 குளங்களிலும் உடைப்பு ஏற்பட்டுள்ளதாகவும், நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படும் 49 பாலங்களும், 95 பொதுக் கட்டடங்களும் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாக அம்மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். மேலும் 91.8 கிலோமீட்டர் நீளத்திற்கு நெடுஞ்சாலைகளும், 134 கிலோமீட்டர் நீளத்திற்கு நகராட்சி சாலைகளும், 336 கிலோமீட்டர் நீளத்திற்கு ஊராட்சி சாலைகளும், 50 கிலோமீட்டர் நீளத்திற்கு சிறப்பு ஊராட்சி சாலைகளும் சேதமடைந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் மாவட்டத்தில் 8 வட்டங்களில் அனைத்து கிராமங்களும் கடும் மழை மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. ஆனால் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களோடு ஒப்பிடுகையில், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறைவானதாகும். 9 கிராமங்களில் சுமார் 1,000 நபர்கள் வெள்ளத்தினால் சூழப்பட்டதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். 24 குடிசைகள் முழுமையாகவும், 240 குடிசைகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. 10 நபர்கள் உயிரிழந்துள்ளார்கள். 11 கால்நடைகள் பலியாகியுள்ளன. தேவையான உணவுப் பொட்டலங்கள், 2.88 இலட்சம் ரூபாய் நிதியுதவியும், 1,320 கிலோ அரிசியும், 264 லிட்டர் மண்ணெண்ணெயும் வழங்கப்பட்டுள்ளன. குடிசைகளை இழந்தவர்களுக்கு இலவசமாக வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. சுமார் 2,500 ஹெக்டேர் நெற் பயிர் முழுமையாகவும், 2,510 ஹெக்டேரில் 50 சதவிகிதத்திற்கு மேலாகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். இம்மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட சாலைகளின் விவரம் வருமாறு: நெடுஞ்சாலைகள் 549 கிலோமீட்டரும், நகராட்சி சாலைகள் 45 கிலோமீட்டரும், ஊராட்சி சாலைகள் 200 கிலோமீட்டரும், சிறப்பு ஊராட்சி சாலைகள் 57 கிலோமீட்டரும், நெடுஞ்சாலைத் துறை பாலம் ஒன்றும், 61 பொதுக் கட்டடங்களும் சேதமடைந்துள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.



பிற்பகல் 12-35

**கடலூர் மாவட்டம்:** கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள வீராணம் ஏரி தமிழ்நாட்டிலுள்ள பெரிய ஏரிகளில் ஒன்றாகும். அதனுடைய விவசாயப் பரப்பு 44,856 ஏக்கராகும். இந்த ஏரிக்கு கொள்ளிடம் ஆற்றிலுள்ள கீழணையிலிருந்து பிரியும் 22 கிலோமீட்டர் நீளமுள்ள வடவாறு வாய்க்கால் மூலம் வினாடிக்கு 2,200 கன அடி நீர் வருகிறது. வீராணம் ஏரிக் கரையின் நீளம் 14 கிலோ மீட்டர். ஏரியின் கொள்ளளவு 1,465 மில்லியன் கன அடி ஆகும். இதைத் தவிர, வீராணம் ஏரியினுடைய வடிபரப்பான 165 சதுர மைல் பரப்பில் பெய்யும் மழை நீர் செங்கால் ஓடை மற்றும் கருவாட்டு ஓடை மூலம் ஏரிக்கு வருகின்றது. இந்த ஏரியின் உச்ச நீர் மட்டம் 47.50 அடியாகும். கடலூர் மாவட்டத்தில் அக்டோபர் மாத இறுதி முதல் தொடர்ச்சியாக மழை பெய்துகொண்டிருந்தது. 29-10-2004 அன்று வீராணம் ஏரியின் நீர் மட்டம் 46.60 அடியாக இருந்தது. தொடர்ந்து மழை பெய்துகொண்டிருந்ததால் கீழணையிலே வடவாறு தலை மதகு மூடப்பட்டு வாய்க்காலில் தண்ணீர் வருவது நிறுத்தப்பட்டது. 30-10-2004 அன்று 10.5 மில்லி மீட்டர் மழையும், 31-10-2004 அன்று 23.5 மில்லி மீட்டர் மழையும், 1-11-2004 அன்று 20 மில்லி மீட்டர் மழையும் தொடர்ந்து 3 நாட்களாக இந்தப் பகுதியில் மழை பெய்தது. இதன் விளைவாக வீராணம் வடிநில பரப்பில் இருந்து வரும் செங்கால் ஓடையின் மூலமாக வினாடிக்கு 4 ஆயிரம் கன அடி மற்றும் கருவாட்டு ஓடையின் மூலமாக வினாடிக்கு 9 ஆயிரம் கன அடி நீரும் வரப்பெற்றது. இதனால் 31-10-2004 அன்று வீராணம் ஏரியினுடைய நீர் மட்டம் 46.90 அடியாக உயர்ந்தது. ஆகவே இந்த அதிகமான அளவு தண்ணீர், லால்பேட்டையில் அமைந்துள்ள உபரி நீர் வெளியேற்றி மூலம் வெள்ளியங்கால் ஓடையில் திறந்துவிடப்பட்டது. 31-10-2004 அன்று வெளியான வெள்ள நீர் அளவு வினாடிக்கு 9,960 கன அடியாகும். இது தவிர வெள்ளாற்றில் 2,680 கன அடி நீர் புதிய வீராணம் உபரி நீர் மடையின் மூலம் திறந்துவிடப்பட்டது. இது தவிர கடலூர் மாவட்டத்தில் 31-10-2004 அன்று சராசரியாக 200 மில்லி மீட்டர் மழை பெய்தது. இதன் விளைவாக வீராணம் ஆயக்கட்டின் 44,856 ஏக்கரில் பெய்த மழை நீர் 22 ஆயிரம் கன அடி வடிகால் நீராக மாறி மணவாய்க்கால் மற்றும் பழைய கொள்ளிடம் ஆறு மூலமாக வெளியேறியது. வீராணம் ஏரியிலிருந்து வெளியேறிய 9,216 கன அடி தண்ணீரும், ஆயக்கட்டு வடிநிலப் பரப்பில் இருந்து வெளியேறிய 22,100 கன அடி நீரும் சேர்ந்து மொத்தம் 31,316 கன அடி தண்ணீர் காட்டுமன்னார்கோயில் மற்றும் சிதம்பரம் வட்டாரங்களில் உள்ள வீராணம் ஆயக்கட்டு பகுதியின் மேல் வெள்ள நீராக ஓடியது.

கடலூர் மாவட்டத்தில் அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் சராசரியாக பெய்யும் மழையின் அளவு 515 மில்லி மீட்டர் ஆகும். ஆனால் இந்த ஆண்டு, அக்டோபர் 29, 30 மற்றும் 31 ஆகிய 3 நாட்களில் மட்டும் மொத்தமாக பெய்த மழையின் அளவு 485 மில்லி மீட்டராகும். ஆக இயற்கையிலேயே அதிகமாக சராசரியாக 3 மாதங்களில் மாவட்டங்களில் பெய்ய வேண்டிய மழை மூன்றே நாட்களில் அந்தப் பகுதியில் பெய்ததன் காரணமாக, அது வெள்ளமாகப் பெருக்கெடுத்து சிதம்பரம் வட்டத்தில் உள்ள பாசனப் பரப்புகளில் பாயும் சூழ்நிலை உருவானது. இதனால்தான் இந்தப் பகுதியில் தண்ணீர் தேங்கும் நிலை ஏற்பட்டது என்பதைத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதன் பின் மழை குறைந்ததனால் வீராணம் ஏரியிலிருந்து உபரி நீர் வெளியேற்றுவது நிறுத்தப்பட்டு, வயல்களில் தேங்கிய நீரும் 3 நாட்களில் வடியப்பெற்றது. இந்த மழையினால் கடலூர் மாவட்டத்தில் 257 வருவாய் கிராமங்களும், 251 ஊராட்சிகளும், 6 தனி ஊராட்சிகளும், 5 வட்டங்களில் பாதிக்கப்பட்டன. 4.32 இலட்சம் நபர்கள் பாதிக்கப்பட்டதாகவும், 63 ஆயிரம் நபர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். 417 குடிசைகள் முழுமையாகவும், 4,745 குடிசைகள் பகுதியாகவும் சேதம் அடைந்துள்ளன. 18 நபர்கள் உயிரிழந்துள்ளனர். 19 கால்நடை இனங்கள் பலியாகியுள்ளன. 39.50 இலட்சம் ரூபாய் நிதி உதவியும், 1,16,064 கிலோ அரிசியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் 154 மையங்கள் மூலமாக தேவையான உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. 17 இடங்களில் சமூக நல சமையல் கூடங்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. சுமார் 5 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் முழுமையாகவும், சுமார் 6 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் 50 சதவிகிதத்திற்கு மேல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் மற்ற பயிர்கள் சுமார் 50 ஹெக்டேர் பரப்பளவில் பாதிக்கப்பட்டதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். கடலூர் மாவட்டத்தில் 112 குளங்களிலும், 75 கால்வாய்களிலும் உடைப்பு ஏற்பட்டுள்ளது. 55 நெடுஞ்சாலை பாலங்களும், 159 பொதுக் கட்டடங்களும் சேதம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இம்மாவட்டத்தில் பாதிப்புக்கு உள்ளான சாலைகள். நெடுஞ்சாலைகள் 455 கிலோமீட்டர். நகராட்சி சாலைகள் 300 கிலோமீட்டர், ஊராட்சி சாலைகள் 2,810 கிலோமீட்டர், சிறப்பு ஊராட்சி சாலைகள் 180 கிலோமீட்டர் ஆகும். விருத்தாசலத்தையும் வேப்பூரையும்



இணைக்கும் மாநில நெடுஞ்சாலையில் மணிமுத்தா நதியின் மீது 126 ஆண்டுகால பழமையான பாலம் ஒன்று 13-11-2004 அன்று வெள்ளம் காரணமாக மிகுந்த சேதத்திற்கு உள்ளானது. புதிய பாலம் கட்டுவதற்கு 5 கோடி ரூபாய் செலவில் கருத்துரு அரசுக்கு வரப்பெற்றுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதி பெற்று, புதிய மேல்மட்டப் பாலம் ஒன்று விரைவில் கட்டி முடிக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-40

**விழுப்புரம் மாவட்டம்:** விழுப்புரம் மாவட்டத்தில் 600 வருவாய் கிராமங்களும், 10 தனி ஊராட்சிகளும், 2 நகராட்சிகளும் உள்ளடங்கிய 7 வட்டங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. சுமார் 12 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 476 குடிசைகள் முழுமையாகவும், 2,289 குடிசைகள் பகுதியாகவும் சேதம் அடைந்துள்ளன. 22 நபர்கள் உயிரிழந்துள்ளார்கள். 13 கால்நடை இனங்களும் பலியாகியுள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொருட்கள் மற்றும் 28.15 இலட்சம் ரூபாய் நிதி உதவியும், 2,380 கிலோ அரிசியும், 476 லிட்டர் மண்ணெண்ணெயும் வழங்கப்பட்டுள்ளது. முழுவதுமாக குடிசைகள் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு வேட்டி, சேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 581 ஹெக்டேர் பரப்பில் நெற் பயிர்கள் முழுமையாகவும், 112 ஹெக்டேர் பகுதியாகவும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 896 ஹெக்டேர் பரப்பளவில் மாற்றுப் பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளன. நெடுஞ்சாலைப் பாலங்கள் 32-ம், கட்டடங்கள் 650-ம் சேதம் அடைந்துள்ளன.

பாதிப்பு ஏற்பட்டுள்ள சாலைகளின் விவரங்கள். நெடுஞ்சாலைத் துறைச் சாலைகள் 629 கிலோமீட்டரும், நகராட்சிச் சாலைகள் 80 கிலோமீட்டரும், ஊராட்சிச் சாலைகள் 6,000 கிலோமீட்டரும், சிறப்பு ஊராட்சிச் சாலைகள் 250 கிலோமீட்டரும் பாதிப்படைந்திருக்கின்றன.

நீலகிரி மாவட்டத்தில் கடும் மழையால் 139 குடிசைகள் ஓரளவும், 4 குடிசைகள் முழுமையாகவும் பாதிப்படைந்துள்ளதாகவும், ரூபாய் 1.35 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இம்மாவட்டத்தின் சாலைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. 223 கிலோமீட்டர் நீளமுள்ள நெடுஞ்சாலை மற்றும் அவற்றில் 107 சிறு பாலங்கள் சேதம் அடைந்துள்ளன.